உயர்ந்தரகப் புடைவைகள்
மற்றும்
சேட்டிங் சூட்டிங்
பட்டு வேட்டி
சால்வைகளுக்கு

மங்கை
பட்டுச் சோலை
8, சிறப்பு அங்காடி,
சுன்னாகம்.
[சி-875]

பக்கங்கள் ஆறு

Registered as a Newspaper

# உதயன்

விலை ரூபா 5-00

கல்யாண வைபவங்களுக்கு
தேவையான
கூறைத் தினிசுகளைத்
தெரிவு செய்ய நாடுங்கள்

மங்கை
பட்டுச் சோலை
8, சிறப்பு அங்காடி
சுன்னாகம்.
[சி-875]

சுடர் 10 திருவள்ளுவர் ஆண்டு 2026 பங்குனி 19 ஞாயிற்றுக்கிழமை (02 - 04 1995) UTHAYAN A Lively National Tamil Daily கதிர் 126

# வெட்டுப்புள்ளியால் பாதிப்புற்ற யாழ். மாணவருக்கு நிவாரணம்

## ஜனாதிபதி சந்திரிகா வாக்குறுதி

கொழும்பு, ஏப்ரல் 2

வெட்டுப்புள்ளி முறையினால், பல்கலைக்கழக அனுமதியில் பாதிக்கப்பட்ட யாழ்ப்பாண மாவட்ட மாணவருக்கு நிவாரணம் வழங்குவதாக, ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கா வாக்குறுதி அளித்துள்ளார்.

பாதிக்கப்பட்ட மாணவர்களின் பிரதிநிதிகள் எட்டுப் பேர் கொண்ட தூதுக்குழு ஜனாதிபதியை நேற்றுச் சந்தித்தது. வெட்டுப் புள்ளி முறையால் தமக்கு ஏற்பட்ட பாதிப்பையும், யாழ்ப்பாணத்தின் கல்வி வசதிக் குறைவையும் தூதுக்குழு எடுத்துக் கூறியது.

சுமார் 2 மணி நேரமாக நடந்த இந்தச் சந்திப்பின் போது, பாதிக்கப்பட்ட யாழ். மாணவருக்கு விரைவில் நியாயமான தீர்வு வழங்கப்போவதாக ஜனாதிபதி வாக்குறுதி அளித்தார்.

பல்கலைக்கழக அனுமதியால் பாதிக்கப்பட்ட மாணவர்களின் பிரதிநிதிகள் எட்டுப்பேர் (6 மாணவர்களும், 2 மாணவிகளும்) தமக்கு நிவாரணம் தேடுவதற்காக, தென்னிந்திய திருச்சபையின் யாழ். ஆயர் அதி வண. கலாநிதி எஸ். ஜெபநேசன் தலைமையில் கொழும்பு சென்றது தெரிந்ததே.

மாணவர் தூதுக்குழுவினர் பல்கலைக்கழக அனுமதி சம்பந்தப்பட்ட அதிகாரிகள், மற்றும் கல்வி உயர் கல்வி அமைச்சர் ஆகியோரைச் சந்தித்து தமது நிலையை விளக்கினர்.

அதன் தொடர்ச்சியாக தூதுக்குழுவினர் யாழ். மாவட்ட எம். பி. யான டக்ளஸ் தேவானந்தாவுடன் ஜனாதிபதியை நேற்றுச் சந்தித்துப் பேசினர்.

இச்சந்திப்பின்போது வடபகுதி மாணவர்கள் படும் இன்னல்கள் பற்றி ஜனாதிபதி விளக்கமாக கேட்டறிந்து தெரிந்து கொண்டார் எனத் தெரிவிக்கப்பட்டது.

பல்வேறு வசதியீனங்களுக்கு மத்தியிலும் வெட்டுப் புள்ளியினாலும் தாம் பாதிக்கப்பட்டிருப்பதை இந்த மாணவர் பிரதிநிதிகள் ஜனாதிபதியிடம்

(6 ஆம் பக்கம் பார்க்க)

## ஜி சீ.ஈ. பரீட்சை முடிவு 10 ஆம் திகதி இங்கு வரும்

யாழ்ப்பாணம், ஏப். 2

கடந்த டிசம்பரில் நடைபெற்ற ஜி சீ ஈ. சாதாரண தரப் பரீட்சையின் பெறுபேறுகள் எதிர்வரும் 10ஆம் திகதி யாழ்ப்பாணத்துக்கு அனுப்பப்படும் அடுத்த நாள் 11 ஆம் திகதி அது இங்கு வெளியாகும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

பரீட்சை முடிவுகள் நாளை மறு தினம் செவ்வாய்க்கிழமை கொழும்பில் வெளியாகும் என்றும் —

யாழ். மாவட்ட பெறுபேறுகள் எதிர்வரும் 10 ஆம் திகதி யாழ்ப்பாணத்துக்கு எடுத்து வரப்படும் என்றும் கொழும்பில் தங்கியுள்ள யாழ் கல்வித் திணைக்கள அதிகாரி ஒருவர் நேற்று யாழ் செயகத்துக்கு அறிவித்துள்ளார்.

## சமாதான முயற்சிகள் மீது பாப்பரசர் அதிக அக்கறை

### ஆயர்கள் மாநாட்டுக்கு அவர் செய்தி

கொழும்பு, ஏப். 2

இலங்கையில் இனப்பிரச்சினைக்குத் தீர்வு காண்பதற்காக முன்னெடுக்கப்பட்டிருக்கும் சமாதானப் பேச்சுவார்த்தைகள் மீது புனித பாப்பரசர் இரண்டாவது அருளப்பர் சின்னப்பர் தமது ஆழ்ந்த அக்கறையை தெரிவித்துள்ளார்.

இலங்கை கத்தோலிக்க ஆயர்கள் மாநாட்டுக்கு அனுப்பி வைத்துள்ள செய்தி ஒன்றிலேயே பாப்பரசர் தமது அக்கறையையும், கரிசனையையும் வெளிப்படுத்தியுள்ளார்.

இலங்கையில் நல்லெண்ணம் தொடர்ந்து நிலவ வேண்டும் எனத் தாம் பிரார்த்திப்பதாகவும் —

இன நெருக்கடிக்கு நீதியானதும், சமாதான ரீதியிலானதுமான தீர்வு ஒன்றைக் காண்பதற்கான முயற்சிகளில் நல்லெண்ணம் படைத்த சகல இலங்கையர்களும் நெகிழ்வடையாதவர்களாக — உறுதியுடன் — இருக்க வேண்டும் என்றும் பாப்பரசர் தமது செய்தியில் தெரிவித்துள்ளார்

[ஐ-4]

## 10 ஆம் திகதிக்கு முன்னர் நான்காம் கட்டப் பேச்சு?

### "டெய்லி நியூஸ்" தகவல்

கொழும்பு, ஏப். 2

அரசுக்கும் விடுதலைப் புலிகளுக்கும் இடையிலான நான்காம் கட்டப் பேச்சுக்கள் எதிர்வரும் 10 ஆம் திகதிக்கு முன்னர் நடைபெறும்

அரசவட்டாரங்களை மேற்கோள்காட்டி 'டெய்லி நியூஸ்' பத்திரிகை இத் தகவலை வெளியிட்டிருக்கிறது

விடுதலைப்புலிகள் இயக்கத் தலைவர் பிரபாகரன் அனுப்பிய பிந்திய கடிதம் கடந்த வியாழக்கிழமை இரவு தமக்கு கிடைத்ததாகவும் —

அந்தக் கடிதத்தில் அவர் தெரிவித்த கோரிக்கையின் படி அரச பிரதிநிதிகள் குழுவை 1 - 4 - 95 அன்று யாழ்ப்பாணத்துக்கு அனுப்ப முடியாதிருப்பதாகவும் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கா தெரிவித்தார் என்றும் அந்தச் செய்தியில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

பிரபாகரனின் கடிதத்தில் உள்ள விடயங்கள் குறித்து ஆராய்ந்து முடிவெடுக்க கால அவகாசம் போதாமல் இருப்பதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

(ஐ-3)

## சமாதான முயற்சிக்கு ஜப்பான் முழு ஆதரவு

### நேற்று சந்திரிகாவிடம் தெரிவிப்பு

கொழும்பு, ஏப். 2

இலங்கை அரசின் சமாதான முயற்சிகளுக்கு ஜப்பானிய அரசாங்கம் சகல உதவிகளையும் வழங்கும். போரினால் பாதிக்கப்பட்டுள்ள வடக்கு கிழக்குப் பகுதிகளில் மேற்கொள்ளப்படும் புனரமைப்பு நடவடிக்கைகளுக்கு ஜப்பானிய அரசு உதவும்.

ஜப்பானிய நாடாளுமன்ற உறுப்பினரும் ஜப்பான் — இலங்கை சங்க நிர்வாகபணிப்பாளருமான ஐகுவாகுக் கோவா ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்காவிடம் இவ்வாறு தெரிவித்தார்.

நேற்று மாலை அவர் ஜனாதிபதியைச் சந்தித்து பேசினார்.

இலங்கை ஜப்பான் நட்புறவு கழகத்தின் 35 ஆவது ஆண்டு விழா தொடர்பான, நிகழ்ச்சிகளில் கலந்து கொள்வதற்காக அவர் இலங்கை வந்துள்ளார்.

(இ 4)

## சமாதான முயற்சியை குழப்பும் விதத்தில்

# தகவல் தொடர்பு சாதனங்கள் பொறுப்பற்ற முறையில் நடக்கின்றன

### சந்திரிகா குற்றச்சாட்டு

கொழும்பு, ஏப். 2

'தகவல் தொடர்புசாதனங்கள் பொறுப்பற்ற முறையில் நடந்துகொள்வதனால் விடுதலைப் புலிகளுடன் மேற்கொள்ளப்படும் சமாதான முயற்சிகள் பற்றிய நடைமுறைகளையும், அணுகுமுறைகளையும் வெளியிடுவது மிக அபாயகரமானது'

ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க நேற்று முன்தினம் ஜனாதிபதி செயலகத்தில் நடத்திய செய்தியாளர் மாநாட்டில் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

குறிப்பிட்ட ஒரு நிறுவனத்தைச் சேர்ந்த பத்திரிகைகள், நாட்டின் சமாதான முயற்சிகளை நாசப்படுத்தும் அபாயகரமான நடவடிக்கையில் ஈடுபட்டு இருக்கின்றன.

அப்பட்டமான பொய்களை பிரசுரித்து வரும் இத்தகைய பிரசார நடவடிக்கையில் சம்பந்தப்பட அரசு விரும்பவில்லை

குறிப்பிட்ட ஒரு தொலைக்

(6 ஆம் பக்கம் பார்க்க)

# புலிகளின் மனிதாபிமான ரீதியான கோரிக்கை மீது கவனம் செலுத்துக!

### வெளிநாட்டு அமைப்பு சந்திரிகாவிடம் கோரிக்கை

கொழும்பு, ஏப். 2

'அரசியல் ரீதியில் அல்லாத மனிதாபிமான அடிப்படையிலான விடுதலைப் புலிகளின் கோரிக்கைகளில் அரசு உரிய கவனம் செலுத்த வேண்டும்'.

—இவ்வாறு, 'இலங்கையில் சமாதானத்துக்கான நண்பர்கள்' (Friends For Peace In Srilanka) என்ற அமைப்பு, ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்காவிடம் கோரிக்கை விடுத்துள்ளது.

இந்த அமைப்பு ஹொங்கொங்கில் செயற்பட்டு வருகின்றது

ஆசியாவைச் சேர்ந்த ஆறு அரச சார்பற்ற நிறுவனங்களைச்சேர்ந்த ஜனாதிபதி சந்திரிகாவுக்கு அனுப்பியுள்ள மனு ஒன்றில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

வடக்குக்கும், தெற்குக்கும் இடையில் பாதுகாப்பான பாதை ஒன்றை அரசு திறக்க வேண்டும். ஆயினும் அதனுடன் சம்பந்தப்பட்ட கடுமையான சிக்கல்களை நாம் அறிவோம்; எனினும் வழமையான வாழ்க்கை நிலையை ஏற்படுத்துவதற்கே முதலிடம் கொடுக்கப்பட வேண்டும் என நாம் கருதுகின்றோம்.

பேச்சுவார்த்தைக்கான கதவை திறந்து வைத்திருப்பதில் தொடர்ந்தும் அக்கறை காட்டுமாறு தமிழீழ விடுதலைப் புலிகள் அமைப்பின் தலைவர் வேலுப்பிள்ளை பிரபாகரனை நாம் கேட்டுக்

(6 ஆம் பக்கம் பார்க்க)

## கிழக்கு பல்கலைக்கழக இடமாற்றம்:

## வந்தாறுமூலையில் மக்கள் திரண்டு எதிர்ப்பு ஊர்வலம்!

கொழும்பு, ஏப். 2

கிழக்கு பல்கலைக்கழகத்தை அம்பாறைக்கு இடம் மாற்றம் செய்ய மேற்கொள்ளப்படும் நடவடிக்கைகளைக் கண்டித்து பல்லாயிரக்கணக்கான பொதுமக்கள் நேற்று முன்தினம் எதிர்ப்பு ஊர்வலம் ஒன்றை நடத்தினர்.

வந்தாறுமூலை அம்பலத்தடியில் இருந்து ஆரம்பமான ஊர்வலம் ஏறாவூரை நோக்கிச் சென்றது. பின்னர் அங்கிருந்து மீண்டும் வந்தாறுமூலை வரை ஊர்வலம் நடத்தப்பட்டது.

பாடசாலை மாணவர்கள் உட்பட பெருந்திரளானோர் அந்த ஊர்வலத்தில் கலந்து கொண்டனர்.

பல்கலைக்கழகத்தை வந்தாறுமூலையில் இருந்து அம்பாறை மாவட்டத்துக்கு மாற்றுவதை எதிர்க்கும் கோஷங்கள் ஊர்வலத்தில் எழுப்பப்பட்டன. சுலோக அட்டைகளும் எடுத்துச் செல்லப்பட்டன.

[ஐ-4]

# ஊழல் குற்றம் புரிந்ததாக ஜெயலலிதா மீது வழக்கு!

### சுப்பிரமணிய சுவாமிக்கு ஆளுநர் ரெட்டி அனுமதி



சென்னை, ஏப். 2

ஊழல் புரிந்ததாக தமிழ்நாடு முதலமைச்சர் செல்வி ஜெயலலிதா மீது வழக்குத் தாக்கல் செய்யப்படவுள்ளது.

இதற்கான அனுமதியை தமிழ்நாடு ஆளுநர் டாக்டர் சென்னா ரெட்டி டாக்டர் சுப்பிரமணிய சுவாமிக்கு வழங்கி உள்ளார்.

ஜனதாத் தலைவர் டாக்டர் சுப்பிரமணிய சுவாமி இதனை நேற்று சென்னையில் செய்தியாளர் மாநாட்டில் தெரிவித்தார்.

செல்வி ஜெயலலிதாவுக்கு எதிராக வழக்குத் தொடர ஆளுநர் அளித்த அனுமதி தொடர்பான நகல்களையும —

செல்வி ஜெயலலிதா மற்றும் அவரது சகாக்கள் மீதான ஊழல் குற்றச்சாட்டுக்கள் தொடர்பான நால் அறிக்கை ஆகியவற்றையும் — இந்த செய்தியாளர் மாநாட்டில் டாக்டர் சுப்பிரமணிய சுவாமி செய்தியாளர்களுக்குக் காண்பித்தார்.

★ அரச அதிகாரத்தை தவறுதலாகப் பயன்படுத்தியது.
★ சட்டபூர்வமற்ற முறையில் முதலமைச்சரும் அவரது நண்பர்களும் சலுகைகளைப் பெற்றுக் கொண்டது
★ அளவுக்கு அதிகமான சொத்துக்களைச் சேர்த்துக் கொண்டது

ஆகிய குற்றச்சாட்டுக்கள் செல்வி ஜெயலலிதா மீது சுமத்தப்பட்டுள்ளன.

இந்திய தண்டனைச் சட்டம் மற்றும் ஊழல் தடுப்புச் சட்டம் ஆகியவற்றுக்கு இணங்க ஜெயலலிதா மீது வழக்குத் தொடர ஆளுநர் அனுமதி வழங்கி இருப்பதாக டாக்டர் சுப்பிரமணியசுவாமி தெரிவித்தார்.

மாநிலத்தின் நிர்வாக முதன்மைப் பொறுப்பில் இருக்கும் முதலமைச்சர் உள்துறைப் பொறுப்பையும் தம்முடன் வைத்திருப்பதால் உடனடியாக பதவி விலகி பக்கச்சார்பற்ற நீதிவிசாரணைக்கு வழிவிட வேண்டும் என்றும், ஜனாதிபதி ஆட்சியின் கீழ் தமிழ்நாடு கொண்டு வரப்பட வேண்டும் என்றும் டாக்டர் சுப்பிரமணிய சுவாமி மேலும் கேட்டுள்ளார்.

(இ-4)

## யாழ். பல்கலைக் கழகத்துக்கு

## பிரிட்டிஷ் உபகரணங்கள் செவ்வாயன்று கையளிப்பு

யாழ்ப்பாணம், ஏப். 2

யாழ். பல்கலைக் கழகத்துக்கு பிரிட்டிஷ் அரசு வழங்கிய—ஒரு கோடி ரூபா பெறுமதியான—உதவிப் பொருள்கள் நாளை மறுதினம் செவ்வாய்க்கிழமை பல்கலைக் கழக துணைவேந்தரிடம் கையளிக்கப்படவுள்ளன.

யாழ்ப்பாணம் வந்துள்ள பிரிட்டிஷ் தூதரக ஓ டி.ஏ. ஆலோசகரான திரு. கிறிஸ்ரோபர் ஹொஜ் உதவிப் பொருள்களை துணைவேந்தரிடம் கையளிப்பார்.

உத்தியோகபூர்வ கையளிப்பு வைபவம் செவ்வாய்க்கிழமை முற்பகல் 9 மணிக்கு பல்கலைக்கழக சபை அறையில் நடைபெறும்.

பிரிட்டிஷ் அரசு வழங்கிய உதவிப்பொருள்களில் கணனிகள், நவீன உபகரணங்கள்,

(6 ஆம் பக்கம் பார்க்க)

## உணவுப்பொருளுடன் சம்பந்தப்பட்ட

## சகல வியாபாரிகளும் லைசென்ஸ் பெறவேண்டும்

யாழ்ப்பாணம், ஏப். 2

யாழ் குடாநாட்டில் உள்ள உணவுப் பொருளுடன் சம்பந்தப்பட்ட சகல வியாபாரிகளும் தமிழீழ சுகாதார [illegible] பிரிவினால் 1995 ஆம் ஆண்டுக்குரிய அனுமதிப் பத்திரத்தை (லைசென்ஸை) பெற்றுக் கொள்ளவேண்டும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

லைசென்ஸ் இன்றி உணவுத் தொழில் புரிவோர் மீது தமிழீழ உணவுச் சட்டத்தின் படி நடவடிக்கை மேற்

(6 ஆம் பக்கம் பார்க்க)

## ஆளுநரின் ஆணை நான் சந்திக்க வேண்டிய சவால்

### ஜெயலலிதா கருத்து

சென்னை, ஏப். 2

எனது மனச்சாட்சி தெளிவாக இருக்கிறது நீதிமன்றத்தில் எனது நிலை தெளிவாக்கப்பட்டு நீதி கிடைக்கும் என்ற முழு நம்பிக்கை எனக்கு இருக்கிறது தமிழக ஆளுநரின் ஆணை நான் சந்திக்க வேண்டிய மற்றும் ஒரு சவால்.

தமிழ்நாடு முதலமைச்சர் செல்வி ஜெயலலிதா நேற்று மேற்கண்டவாறு கருத்துத் தெரிவித்தார்.

[இ-4]

## ஜெயலலிதா பதவி விலக வேண்டும் என கோரிக்கை

சென்னை, ஏப். 2

செல்வி ஜெயலலிதா மீது ஊழல் குற்றச்சாட்டு சுமத்தி வழக்குத் தாக்கல் செய்யப்பட இருப்பதால் அவர் முதலமைச்சர் பதவியில் இருந்து விலகி நீதியான விசாரணைக்கு வழி விடவேண்டும் என்று தமிழ்நாடு காங்கிரஸ் தலைவர் குமரி அனந்தன், எம் ஜி ஆர் அண்ணா திராவிட முன்னேற்றக்கழகப் பொதுச் செயலாளர் எஸ். திருநாவுக்கரசு, மறுமலர்ச்சி திராவிட முன்னேற்றக்கழக பொதுச் செயலாளர் வை கோபாலசாமி ஆகியோர் நேற்றுக் கோரிக்கை விடுத்தனர்.

முதலமைச்சர் தனது பதவியை ராஜினாமாச் செய்து விட்டு வழக்கைச் சந்திக்க வேண்டும் என்று நேற்று விடுத்த அறிக்கை ஒன்றில் கோபாலசாமி கேட்டுக்கொண்டுள்ளார்.

[இ-4]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## புலிகளின் குரல் வானொலியில்

02 — 04 1995

ஞாயிறு இரவு

★ 8-02 — இசையரங்கம்— பாடுபவர் திருமதி மோகனாம்பிகை கணேசன்
★ 8-30 — செய்திகள்
★ 8-40 — தொடர் நாடகம் — கருணை ரவி எழுதும் 'காணி நிலம் வேண்டும்' அங்கம் -6

03 — 04 — 1995

திங்கள் காலை

★ 7-02 — மாவீரவணக்கம்
★ 7-15 — நீங்கள் கேட்டவை
★ 7-30 — செய்திகள்
★ 7-35 — பத்திரிகைச் செய்திகள்
★ 7-40 — நீங்கள் கேட்டவை நிகழ்ச்சியின் தொடர்ச்சி

தமிழீழ வானொலி ஒலிபரப்பு

ஞாயிறு மாலை

★ 5-01 — சிந்தனைச் சிதறல்
★ 5-02 — எழுச்சிகீதம்
★ 5-10 — புதியவை
★ 5-15 — மழலைகளுக்காக
★ 5-30 — சதம்பம்
★ 6-00 — சிந்தனைக்குச் சில விநாடிகள் தொடர்ந்து 6-30 மணி வரை உங்கள் தெரிவு இடம்பெறும்.

# வடக்கு - கிழக்கு ஆஸ்பத்திரிகளுக்கு பாகிஸ்தான் வைத்திய நிபுணர்கள்

## நடவடிக்கை எடுக்குமாறு அமைச்சர் பௌசி பணிப்புரை

யாழ்ப்பாணம், ஏப். 2

வடக்கு-கிழக்கு மாகாணத்திலுள்ள வைத்தியசாலைகளில் நிலவும் வைத்திய நிபுணர் பற்றாக்குறையை நீக்குவதற்கு பாகிஸ்தானில் இருந்து வைத்திய நிபுணர்களை வரவழைப்பதற்கு சுகாதார அமைச்சர் ஏ. எச் எம். பௌசி தீர்மானித்துள்ளார்.

கடந்த மாதம் 21ஆம் திகதி கொழும்பில் அமைச்சரின் பணியகத்தில் வடக்கு-கிழக்கு மாகாணத்திலுள்ள சுகாதார குறைபாடுகள் குறித்துகேட்டறிவதற்காக நடைபெற்ற கூட்டம் ஒன்றில் இது பற்றி அமைச்சர் தெரிவித்தார்.

இக்கூட்டத்தில் வடக்கு-கிழக்கு மாகாண சபையின் சுகாதார சேவைகள் பணிப்பாளர் மற்றும் இம்மாகாணத்திலுள்ள பிரதிமாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர்கள் கலந்து கொண்டனர்.

யாழ்ப்பாணம், கிளிநொச்சி, மன்னார், மட்டக்களப்பு, திருகோணமலை, அம்பாறை போன்ற தமிழ்ப் பிரதேசங்களைச் சேர்ந்த பிரதி மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர்கள் தமது பகுதிகளில் வைத்திய நிபுணர்கள் பற்றாக்குறை குறித்து எடுத்துக்கூறிய போதே அமைச்சர் இவ்வாறு தெரிவித்தார்.

பாகிஸ்தானில் இருந்து வைத்திய நிபுணர்களை இங்கு வரவழைப்பதற்கு பாகிஸ்தான் தூதரகத்துடன் தொடர்பு கொண்டு உடன் நடவடிக்கை எடுக்குமாறு இக்கூட்டத்தில் பங்கேற்றிருந்த சுகாதார சேவைகள் பணிப்பாளர் திரு. ஜெறி பெரேராவுக்கு அமைச்சர் பணிப்புரை விடுத்தார். (ஒ-4-15)

## இரும்புச் சங்கிலியால் கால்களை கட்டி

# சிறுமியைத் துன்புறுத்திய எஜமானி கைதானார்!

கொழும்பு, ஏப்.2

பன்னிரண்டு வயதுடைய வேலைக்காரச் சிறுமி ஒருவரை கட்டிலின் கீழ் கட்டிவைத்து துன்புறுத்திய வீட்டு எஜமானி ஒருவரை கல்கிசைப் பொலிஸார்கைது செய்துள்ளனர்.

மேற்படி சிறுமி எஜமானியால் தொடர்ந்து துன்புறுத்தப்படுவதாகக் கிடைத்த தகவலை அடுத்து அவரது வீட்டில் தேடுதல் நடத்திய பொலிஸார் கட்டிலின் கீழ் இரும்புச் சங்கிலியால் கால்கள் பிணைத்துக் கட்டப்பட்ட நிலையிலிருந்து சிறுமியை மீட்டெடுத்தனர்

அந்தச் சிறுமியின் கைகளில் நெருப்புச் சூட்டுக் காயங்கள் காணப்பட்டதாகவும் பொலிஸார் தெரிவித்தனர்.

இச்சம்பவம்தொடர்பாக அந்த எஜமானியின் கணவரும் மகனும் பொலிஸாரால் விசாரணை செய்யப்பட்டு வருகின்றனர். (ஒ-7)

## கோட்டேயில் காயமடைந்தவர் மரணம்!

கோட்டே ஜெயவர்த்தனபுரவில் நாடாளுமன்றக் கட்டடத்துக்கு அருகில் கடந்த வியாழனன்று இடம் பெற்ற துப்பாக்கிச் சூட்டுசம்பவத்தில் காயமடைந்த இளைஞர் ஒருவர் அவசர சத்திர சிகிச்சையின் போது மரணமானார்.

சம்பவம் நடந்த இடத்துக்கு அருகில் மோட்டார் சைக்கிள் திருத்தும் கடை ஒன்றைச்சேர்ந்த ஊழியரான கே சமன் என்பவரே அந்த இளைஞர் எனத் தெரிவிக்கப்பட்டது.

அந்தத் துப்பாக்கிச் சூட்டுச் சம்பவத்தில் இரு பொலிஸார் உட்பட ஐவர் காயமடைந்தனர். (ஐ-6)

## சீமெந்து ஊழியர் சம்பளம்

யாழ்ப்பாணம், ஏப். 2

காங்கேசன் சீமெந்து தொழிற்சாலை ஊழியர்களின் மார்ச் மாதத்துக்குரிய சம்பளக் கொடுப்பனவுகள் நாளை திங்களும் மறுநாள் செவ்வாய்க்கிழமையும் காலை 9.00 மணிமுதல் நண்பகல் 12.00மணி வரை யாழ். வர்த்தக வங்கியில் வழங்கப்படுமென கூட்டுத்தாபனக் காணக்காளர் திரு. க. மகேஸ்வரன் அறிவித்துள்ளார். [ஒ]

## ஆலயங்களில்

வட்டு தெற்கு ஸ்ரீ பரமகுரு முதலிப் பெருமான் ஆலய வருடாந்த அலங்கார உற்சவ நிறைவை ஒட்டி இன்று ஞாயிற்றுக் கிழமை நண்பகல் 12 மணிக்கு 1008 சகஸ்ர சங்காபிஷேகமும் அதனைத் தொடர்ந்து விசேட பூசையும், மகேஸ்வர பூசையும் இடம்பெறும். (ஒ-14-161]

## விளையாட்டு நிகழ்வு

யாழ் மாவட்ட விளையாட்டு அபிவிருத்திக் குழுவுக்காக யாழ். மாவட்ட உதைபந்தாட்டச் சபை நடத்தும் உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டியின் மாவட்ட நிலைப் போட்டிகளில் இன்று மட்டுவில் ம. வித்தியாலயத்தில் நடைபெறவுள்ள ஆட்டத்தில் பங்குபற்றும் அணிகள் வருமாறு:-

★ பிற்பகல் 3 மணி— யங் றோயல் வி.க அணி எதிர் சிறிதாஸ் வி.க அணி.

(ஐ)

# முஸ்லிம்களுக்கு எதிராக சிவசேனை அச்சுறுத்தல்

பம்பாய், ஏப். 2

இந்தியாவின் வர்த்தகமையமான பம்பாய் நகரில் வசிக்கும் பங்களாதேஷ் பாகிஸ்தான் ஆகிய நாடுகளைச் சேர்ந்த முஸ்லிம்கள் அனைவரும் 15 நாட்களுக்குள் அங்கிருந்து வெளியேறி விட வேண்டும் என எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

மஹாராஷ்டிர மாநிலத்தின் ஆட்சியைக் கைப்பற்றியுள்ள சிவசேனை கட்சியின் ஸ்தாபகத் தலைவர் பால் தக்கரே இந்த எச்சரிக்கையை விடுத்துள்ளார்.

பம்பாய் நகரில் வசிக்கும் சுமார் 18 லட்சம் முஸ்லிம்கள் மத்தியில் இந்த எச்சரிக்கை பெரும் பீதியையும் பதற்றத்தையும் ஏற்படுத்தியுள்ளது.

அண்மையில் நடந்த மாநிலத் தேர்தலில் மஹாராஷ்டிராவின் ஆட்சியை இந்து மத அடிப்படைவாதக் கட்சிகளான பாரதிய ஜனதா கட்சியும், சிவசேனை கட்சியும் இணைந்த கூட்டணி கைப்பற்றியதைத் தொடர்ந்து பம்பாயில் உள்ள முஸ்லிம் மக்கள் பெரும் அச்சுறுத்தல்களை எதிர்நோக்கியுள்ளனர்.

இதேவேளை—

சிவசேனைக் கட்சித் தலைவர் தக்கரேயின் எச்சரிக்கையைத் தொடர்ந்து அவருக்கும், மஹாராஷ்டிர முதலமைச்சர் மனோகர் ஜோஷிக்கும் கொலைப் பயமுறுத்தல்

(6 ஆம் பக்கம் பார்க்க)


## காணவில்லை

டோமன், இனத்தைச் சேர்ந்த 10 மாத வயதுடைய பிறவுண் நிறத்தை கொண்ட வால் கட்டையாக்கிய நாயை 30-3-95 இல் இருந்து காணவில்லை. இதனை யாராவது கண்டிருந்தால் அல்லது அறிந்திருந்தால் கீழ்க்காணும் விலாசத்தில் தொடர்பு கொள்ளவும் தகுந்த சன்மானம் வழங்கப்படும்.

எஸ். எம். பெர்னாண்டோ
580, ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம்.

(36007)


## உதயன் விற்பனை முகவர்

இன்று 02-04-95 தொடக்கம் சாவகச்சேரிப் பகுதி வாசகர்கள் பின்வரும் விற்பனை முகவரிடமும் உதயன் பிரதிகளை பெற்றுக் கொள்ள முடியும் என்பதனை அறியத் தருகிறோம்.

பொன்னுத்துரை விவேகானந்தன்
சிறீ விஷ்ணு விருந்தகம்,
23, யாழ். வீதி,
(கோட்டடி முன்பாக)
சாவகச்சேரி.

முகாமையாளர் (நிர்வாகம்)
உதயன் வெளியீட்டகம்.

292/2, நாவலர் வீதி,
யாழ்ப்பாணம்.

# சிங்கப்பூர் - பிலிப்பீன்ஸ் அரசுகளுக்கிடையே பணிப்பெண் விவகாரம் ஏற்படுத்திய நெருக்கடி

பிலிப்பீன்ஸ் நாட்டு பணிப்பெண் ஒருவர் சிங்கப்பூரில் தூக்கிலிடப்பட்ட சம்பவம் அங்குள்ள சுமார் 75 ஆயிரம் பிலிப்பீன்ஸ் நாட்டுப் பணிப்பெண்களின் எதிர்காலத்தையே கேள்விக்குறியாக்கி உள்ளது

எத்தனையோ எதிர்பார்ப்புகளுடன் சிங்கப்பூருக்குச் சென்ற அவர்கள் தங்கள் கனவுகள் சிதைந்த நிலையில் தற்போது தாயகம் திரும்பிக் கொண்டிருக்கிறார்கள்.

நீண்டகாலமாக தமக்கிடையே நெருங்கிய உறவுகளைப் பேணிவந்த இந்த இரு நாடுகளுக்கும் இடையிலான ராஜீக தொடர்புகள் முறிவடைய காரணமாகி விட்ட அந்தப் பெண் யார்?

நான்கு பிள்ளைகளின் தாயாரான 42 வயது, புளோர் கொன்டம்லேசியன் தான் அந்தப் பெண்.

சிங்கப்பூரில் இந்தப் பெண் இரட்டைக் கொலைகளைச் செய்ததாக குற்றஞ்சாட்டப்பட்டார்.

### 1991இல் நிகழ்ந்த இரட்டைக்கொலை

1991ஆம் ஆண்டில் பிலிப்பீன்ஸ் நாட்டைச் சேர்ந்த பணிப்பெண் ஒருவரை கழுத்தை நெரித்து கொலை செய்தார் என்றும்—

இவ்வாறு கொல்லப்பட்ட பணிப்பெண்ணின் எஜமானருடைய 3 வயது குழந்தையை நீர்த்தொட்டி ஒன்றினுள் மூழ்கடித்துக் கொலை செய்தார் என்றும்— சிங்கப்பூர் நீதிமன்றம் ஒன்றில் இவர் மீது வழக்குத் தாக்கல் செய்யப்பட்டது.

கடந்த மூன்றரை வருடங்களாக நடைபெற்றுவந்த விசாரணைகளின் முடிவில் அந்தப் பெண் தன் மீது சுமத்தப்பட்ட கொலைக் குற்றச்சாட்டுகளை ஏற்றுக்கொண்டதை அடுத்து நீதிமன்றம் அவருக்கு மரணதண்டனை வழங்கி தீர்ப்பு களித்தது

இத்தீர்ப்பினை ரத்துச் செய்யுமாறு பல தரப்பினரிடம் இருந்தும் வேண்டுகோள்கள் விடுக்கப்பட்டன.

கொன்டலேசியனை மன்னித்து விடும்படி பிலிப்பீன்ஸ் அதிபர் பிடல் ராமோஸ், சிங்கப்பூர் அரசிடம் வேண்டுகோள் விடுத்திருந்தார்

அதேசமயம் இவரின் உயிரைக் காப்பாற்றும் பொருட்டு கிறிஸ்தவ மதக்குழுக்களும், இடதுசாரிக் குழுக்களும் போராடின

மனித உரிமை இயக்கங்கள் பலவும் இத்தீர்ப்பினைக் கண்டித்து இருந்தன

தலைநகர் மணிலாவில், சிங்கப்பூர் தூதகரத்திற்கு முன் ஆர்ப்பாட்டங்களும் நடத்தப்பட்டன. அவரை விடுதலை செய்யுமாறு சில தீவிரவாதக் குழுக்கள் சிங்கப்பூர் அரசுக்கு எச்சரிக்கைகளையும் விடுத்திருந்தன.

ஆயினும் எவரது வேண்டுகோள்களுக்கும் செவிசாய்க்க சிங்கப்பூர் அரசு இறுதிவரை மறுத்துவிட்டது.

அந்தப் பெண்ணுக்காக ஆஜரான சட்டத்தரணிகள் தீர்ப்புக்கு எதிரான சாட்சியங்களை முன்நிறுத்த தமக்கு சந்தர்ப்பம் அளிக்குமாறும்—

அதற்காக 14 நாட்கள் அவகாசம் தருமாறும்— சிங்கப்பூர் அரசிடம் கேட்டிருந்தனர்.

அதனையும் சிங்கப்பூர் அரசாங்கம் கேட்கவில்லை.

அந்தப் பெண்ணின் உயிரைக் காப்பாற்ற கடைசி நிமிடம்வரை எடுக்கப்பட்ட எல்லா முயற்சிகளும் தோல்வி கண்டன.

சிங்கப்பூரில் உள்ள சாங்கி சிறைச்சாலையில் கடந்த 17 ஆம் திகதி அந்தப் பெண் தூக்கிலிடப்பட்டார் இவரது சடலம் பின்னர் பிலிப்பீன்சுக்கு அனுப்பி வைக்கப்பட்டது.

ஒரு நாட்டுப் பிரஜை மற்றொரு நாட்டில் கண்டனை பெறுவதும், தூக்கிலிடப்படுவதும் புதிதான ஒன்றல்ல.

ஆனால் கொன்டபலேசியனின் மரணதண்டனை விவகாரம் இந்தப் பிராந்தியத்திலேயே பாரிய நெருக்கடியை ஏற்படுத்திவிட்டது

பணிப் பெண்ணான புளோர் கொன்டம்லேசியனின் இறுதிச் சடங்குகள் பிலிப்பீன்ஸில் உள்ள அவரது சொந்த ஊரான சான்பாப்பிலோவின் முக்கிய நகரமொன்றில் நடைபெற்றன. அவரது இறுதிச் சடங்கில் சுமார் ஐம்பதினாயிரம் பேர் வரை பங்குபற்றினர்

அவரின் பிரேதப்பெட்டி பிலிப்பீன்ஸ் நாட்டுக் கொடியினால் மூடப்பட்டு ஊர்வலமாக எடுத்து வரப்பட்டது.

உறவுகள் சீர் குலைந்தன

இந்த விவகாரத்தில் இரண்டு நாடுகளுமே பொறுமையுடனும், நேர்மையுடனும், சகிப்புத் தன்மையுடனும் நடந்து கொள்ளவில்லை என்ற கருத்து பொதுவாக உள்ளது.

இரு நாட்டுத் தலைவர்களும் அவசரமாக எடுத்த சில முடிவுகள் உறவுகளில் விரிசல் ஏற்பட வழி வகுத்தது.

பிலிப்பீன்ஸ் ராணுவத் தளபதியின் சிங்கப்பூர் விஜயம் நிறுத்தப்பட்டமை —

இருநாடுகளும் மேற்கொள்ள இருந்த கூட்டு கடற்படைப் பயிற்சியை ரத்துச் செய்வதாக அறிவித்தமை —

மற்றும் சிங்கப்பூரில் உள்ள தமது நாட்டுப் பணிப்பெண்களை திருப்பி அழைப்பதாக பிலிப்பீன்ஸ் அதிபர் பிடல் ராமோஸ் அறிவித்தமை — போன்றன அவசர நடவடிக்கைகளாகக் கருதப்படுகின்றன.

கடந்த 23ஆம் திகதி இரு நாடுகளும் தத்தமது ராஜீகப் பிரதிநிதிகளை திருப்பி அழைத்து விட்டன.

இச்சம்பவம் இரு தரப்பினரிடையேயும் ஏற்பட்ட பிளவு நிலையானது உலகளாவிய ரீதியில் பறை சாற்றப்பட வழிவகுத்தது

அநேகமான நாடுகள் இச்சந்தர்ப்பத்தில்தான் இந்த

## ஆசியான் அமைப்பு பிளவு படும்?

இரு நாடுகளுக்கும் இடையேயான பிணக்குப் போக்கை அதன் தீவிரத் தன்மையை அறியத் தலைப்பட்டன.

அதேசமயம் இந்த மரண தண்டனை சம்பவத்தால் ஆத்திரமடைந்துள்ள பிலிப்பீன்ஸ் மக்கள், ஆர்ப்பாட்டங்களில் ஈடுபட்டு வருவதுடன், சிங்கப்பூர் நாட்டினது தேசியக் கொடியை தீயிட்டும் கொளுத்தி உள்ளனர்.

சிங்கப்பூர் தேசியக் கொடி தீயிலிடப்பட்டது, அந்நாட்டு மக்கள் மத்தியில் பெரும் அதிருப்தியை தோற்றுவித்துள்ளது

இத்தகைய சம்பவங்கள் இரு நாடுகளின் முறுகல் நிலையை, மேலும் அதிகரித்துள்ளன

### ஏசியானில்

இந்த இரு நாடுகளும் 'ஏசியான்' அமைப்பின் அங்கத்துவ நாடுகள் ஆகும்.

'ஏசியான்' அமைப்பின் 28 வருட காலத்தில் இரு அங்கத்துவ நாடுகள் எதிர் அணிகளானது, தற்போது இரண்டாவது முறையாகும்.

1968 ஆம் ஆண்டில், கிழக்கு மலேசியாவின் 'சபா' பிரதேசத்துக்கு பிலிப்பீன்ஸ் உரிமை கோரிய போது இப்படியான ஒரு நெருக்கடி ஏற்பட்டது.

தற்போதைய 'மரண தண்டனை' சம்பவம் ஏசியான் அங்கத்துவ நாடுகளான சிங்கப்பூரினதும் பிலிப்பீன்ஸினதும் உறவுகளை முடிவின் முனையில் நிறுத்தி வைந்துள்ளது.

இந்த 'மரண தண்டனை' சம்பவம் தொடர்பாக சிங்கப்பூர், நேர்மையாகத் தொழிற்படவில்லை என்றும்-அது தான் தோன்றித் தனமான முறையில், நீதியை எடுத்துக்கூற சந்தர்ப்பம் அளிக்காமல் நடந்து கொண்டது என்றும் குற்றம் சாட்டப்படுகிறது.

ஆனால் குற்றம் சாட்டப்பட்ட பெண்மணி தனது குற்றங்களை ஒப்புக் கொண்டதுடன், இச்சம்பவங்கள் தொடர்பாக நகைகள் சிலவற்றை மீட்க உதவினார் என்றும் சிங்கப்பூர் அரசு தெரிவிக்கின்றது

தான் செய்தது நியாயம் என்று சிங்கப்பூரும், இல்லை என்றுபிலிப்பீன்ஸும் வாதாடுகின்றன.

ராஜீக தூதர்களை இருநாடுகளுமே திருப்பி அழைத்துக் கொண்டன.

இரு நாடுகளுக்கும் இடையிலான கூட்டு அரசியல் மற்றும் பாதுகாப்பு துறைசார் நடவடிக்கைகள் நிறுத்தப்பட்டு விட்டன

### பணிப்பெண்கள் செல்லத் தடை

இவ் விவகாரம் இத்துடன் நின்று விடவில்லை. தனது நாட்டில் இருந்து இனிமேலும் தொழில் நாடி சிங்கப்பூருக்கு எவரும் செல்வதை பிலிப்பீன்ஸ் அதிபர் தடுத்து விட்டார்

அதே சமயம் சிங்கப்பூரில் பணியாற்றும் தமது நாட்டு பிரஜைகளை மீண்டும் நாடு திரும்பும்படியும் அவர் பணித்து உள்ளார்.

சிங்கப்பூரில் உள்ள பிலிப்பீன்ஸ் பணிப்பெண்களும் தமது உயிர் பற்றியும், தமது எதிர்காலம் பற்றியும் அச்சம் கொண்டுள்ளனர்.

அதற்கிடையில் தனது நாட்டுப் பிரஜைகளை சிங்கப்பூரில் இருந்து திருப்பி அழைப்பதற்காக தனது நாட்டு ஆகாய விமானங்கள் தயாராக உள்ளதாகவும், அவை தரை இறங்குவதற்கான அனுமதியை சிங்கப்பூர் அரசிடம் எதிர் பார்த்துள்ளதாகவும் பிலிப்பீன்ஸ் இந்த வார ஆரம்பத்தில் அறிவித்தது.

அதனை அடுத்து இவ்வார நடுப்பகுதியில் முதற்கட்டமாக சிங்கப்பூரில் தொழில் பார்த்த சுமார் 83 பிலிப்பீன்ஸ் பணிப்பெண்கள் திருப்பி அழைக்கப்பட்டு விட்டனர்.

இந்த ''திருப்பி அழைப்பு'' நடவடிக்கை மேலும் தொடரப்பட உள்ளது.

### எதிர் காலம் கேள்விக்குறி

''மரண தண்டனை'' வழங்கியதான இச்சிறிய நடவடிக்கை இவ்விரு நாடுகளுக்கும் இடையில் சீர்செய்ய இலகுவற்றதான முறிவை ஏற்படுத்தியுள்ள அதே வேளை — சிங்கப்பூரில் பணிப்பெண்களாக தொழில்நாடிச் சென்ற, தொழில் பார்த்து வந்த பெண்களின் எதிர்காலத்தை எதுவித முன் சமிக்ஞைகளும் இன்றி இருட்டினுள் தள்ளி உள்ளது.

இவர்களது பொருளாதாரம் பற்றிய நிலையும், எதிர்காலம் பற்றிய நிலையும் கேள்விக் குறியாகி உள்ளன.

தமது கனவுகள் சிதைந்த நிலையில் நாடு திரும்பிக் கொண்டிருக்கும் இப்பணிப்பெண்களால் இரு நாடுகளும் பல அச்சுறுத்தல்களை எதிர்நோக்க வேண்டிய சூழநிலைகள் ஏற்பட்டுள்ளன.

பணிப்பெண்கள் திருப்பி அழைக்கப்பட்டமை பிலிப்பீன்ஸ் அரசுக்கு உள்நாட்டு நெருக்கடிகளையும் தோற்றுவிக்கும்

தற்போது அவர்களுக்கான பொருளாதார சமூக வசதிகளை ஏற்படுத்திக் கொடுக்க வேண்டிய பாரிய பொறுப்பு அந்த அரசுக்கு உண்டு.

நாட்டில் மேலும் உருவாகப் போகும் வேலையில்லாத் திண்டாட்டமும், தற்போது இவர்களைப் பராமரிக்க வேண்டிய செலவும் சேர்ந்து பிலிப்பீன்ஸ் அரசை தடுமாற வைக்கப்போகின்றது.

அதே நேரம் சிங்கப்பூரில் இருந்த சுமார் 75 ஆயிரம் பிலிப்பீன்ஸ் பணிப்பெண்களும் திருப்பி அழைக்கப்பட, சிங்கப்பூரில் உடனடியாக போதிய தொழிலாளர் இன்மையால் நெருக்கடி ஏற்பட உள்ளது.

வேலை வாய்ப்பைத் தேடிக் கொண்டு இருக்கும் இலங்கை, இந்தியா போன்ற நாடுகள் சிங்கப்பூரில் வேலை பெற்றுக் கொள்ளக்கூடிய வாய்ப்பு நிலை ஏற்பட்டுள்ளது.

[இ-5]

-ஆதிரை-


## 31ஆம் நாள் நினைவஞ்சலியும் அந்தியேட்டி அழைப்பும் நன்றி நவிலலும்



திருமதி
விஸ்வலிங்கம் கமலாம்பிகை

தோற்றம்: 23 — 05 — 1917

மறைவு: 03 — 03 — 1995

அமரரான எங்கள் குலதெய்வத்தின் 31ஆம் நாள் அந்தியேட்டி கிரியைகளும், சபிண்டீகரணமும் (02-04-95) அன்று சந்தை வீதி, உடுப்பிட்டி இல்லத்தில் நடைபெறும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளும்படி கேட்டுக் கொள்ளப்படுகின்றீர்கள்.

அன்னாரது இறுதிச் சடங்குகளில் கலந்து கொண்டவர்கள், உடன் இருந்து உதவி புரிந்தோர், நேரிலும், கடிதங்கள் மூலமும், பத்திரிகை, வானொலி மூலமும், தொலைபேசி மூலமும் அனுதாபச் செய்திகள் அனுப்பியவர்களுக்கும், வேறு வழிகளில் உதவிகள் புரிந்த அனைவர்க்கும் குடும்பத்தினர் தங்கள் ஆழ்ந்த நன்றியறிதலைத் தெரிவிக்கின்றனர்.

பிள்ளைகள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.

சந்தை வீதி,
உடுப்பிட்டி.

(36002)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சட்ட மன்றத் தேர்தல்களிலே முக்கிய மாநிலங்களை கோட்டை விட்ட காங்கிரஸ்

இன்னும் 14 மாதங்களில் நடைபெறப்போகும் இந்தியப் பொதுத்தேர்தல் முடிவுகளை நாடிபிடித்துக்காட்டும் என்று எதிர்பார்க்கப்பட்ட ஆறு இந்திய மாநில சட்டபேரவைத் தேர்தல்களும் முடிவடைந்து விட்டன.

எல்லை மாநிலங்களான மணிப்பூர், அருணாச்சல் ஆகியவற்றிலும்—

மற்றும் மகாராஷ்டிரா, குஜராத், ஒரிஸா மாநிலங்களிலும்— முதலில் தேர்தல்கள் நடைபெற்றன.

இந்திய தேர்தல் ஆணையாளர் டி. என். சேஷன் பல்வேறு காரணங்களைக் காட்டி பீஹார் மாநில தேர்தலை ஒன்றுக்கு மேற்பட்ட தடவை ஒத்திவைத்தார்.

இறுதியாக கடந்த வாரமே

அதுவும் ஒருமாத காலத்தில் காங்கிரஸ் கட்சி தனது பெரும்பான்மை பலத்தை நிரூபிக்க வேண்டும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

காங்கிரஸ் கட்சி வெற்றி பெற்றுள்ள மற்றும் இரு மாநிலங்கள் அருணாச்சலும் ஒரிஸாவும் ஆகும்.

வடகிழக்கு மாநிலமான அருணாச்சலும் ஓர் எல்லைப்புற மாநிலமே. 1987ஆம் ஆண்டு தான் இந்த மாநிலம் உருவாக்கப்பட்டது தொடர்ந்து ஐந்தாவது தடவையாக காங்கிரஸ் கட்சி அருணாச்சலில் ஆட்சியைக் கைப்பற்றி இருக்கிறது. இந்திய அரசியலைப் பொறுத்தவரை அருணாச்சல் ஒரு முக்கிய மாநிலம் அல்ல.

ஒரிஸாவில் இதுவரை

> ராவ்வின் திறந்த பொருளாதாரக் கொள்கைகளால் மத்திய வர்க்கத்தினரே நன்மை அடைந்தனர்.

அங்கு தேர்தல் நடைபெற்றது.

ஏற்கனவே இந்தியப் பத்திரிகைகளில் வெளியிடப்பட்ட பொதுசன அபிப்பிராய வாக்குக் கணிப்பின்படி பீஹார் மாநிலத்தில் ஜனதாதள் வெல்லும்நிலையில் இருக்கிறது. கலைக்கப்பட்ட சட்டப் பேரவையில் ஏற்கனவே அங்கு ஆட்சியில் இருந்ததும் ஜனதாதள் கட்சிதான் அது மீண்டும் வெற்றிபெற்று ஆட்சியை தக்க வைக்க இருப்பது ஒரு சாதனையே.

**காங்கிரஸுக்குத் தோல்வி**

நடந்து முடிந்த தேர்தல் முடிவுகள் 73 வயதுடைய பிரதமர் நரசிம்மராவுக்கு பெரும் தோல்வி என்பதே அரசியல் அவதானிகளின் பொதுவான கருத்தாகும். ஏனெனில் பிரதான மாநிலங்களை காங்கிரஸ் கோட்டை விட்டுவிட்டது.

எல்லையில் உள்ள சின்னஞ்சிறு மாநிலமான மணிப்பூரில் எந்த ஒரு கட்சியும் அறுதிப் பெரும்பான்மை பெறத்தவறி இருந்தன. ஆகக்கூடிய ஆசனங்களைப் பெற்ற கட்சி என்ற ரீதியில் காங்கிரஸ் கட்சிக்கு ஆட்சி அமைக்க வாய்ப்பு வழங்கப்பட்டது.

ஆட்சியில் இருந்த கட்சி ஜனதாதள்.

தற்போது காங்கிரஸிடம் அக்கட்சி தோல்விகண்டுவிட்டது. காங்கிரஸ் கட்சி அங்கு பதவி ஏற்றுள்ளது.

**காங்கிரஸ் தோற்ற மாநிலங்கள்**

காங்கிரஸ் கட்சி தோல்வி அடைந்த மூன்று மாநிலங்க

## வெளி உலகில்

ளும் மகாராஷ்டிரா, குஜராத் பீஹார் ஆகும்.

இந்தியாவின் பொருளாதாரத்துறையில் மையப்பகுதியாகக் கருதப்படுவது மகாராஷ்டிரா. இங்கு இந்து தீவிரவாதக்கட்சியான பாரதீய ஜனதாவும் பிராந்தியக்கட்சியான சிவசேனையும் (Shiv-Sena) கூட்டரசு அமைத்துள்ளன.

முஸ்லிம்களின் பரமவைரியாகக் கருதப்படும் சிவசேனையைச் சேர்ந்த மனோகர் ஜோஷி மகாராஷ்டிராவின் முதல்வராகப் பதவி ஏற்றுள்ளார். சிவசேனை முதல் தடவையாக ஆட்சியைப் பிடித்துள்ளது.

மகாராஷ்டிராவுக்கு அடுத்ததாக மற்றொரு கைத்தொழில் மாநிலமாகக் கருதப்படும் குஜராத்தில்பாரதிய ஜனதா தனித்து ஆட்சியைப் பிடித்துள்ளது.

குழப்பங்கள் மலிந்த மாநிலமான பீஹாரில் ஜனதாதள் வெல்லும் நிலையில் உள்ளது.

கடந்த டிசம்பர் மாதம் நான்கு மாநிலங்களுக்குத் தேர்தல்கள் நடைபெற்றன.

அதில் காங்கிரஸ் ஒரு மாநிலத்தில் மட்டும் வெற்றிபெற்

யின் படுகொலைச் சம்பவம் இடம்பெற்றது.

ராஜீவ்வின் விதவை மனைவியான சோனியா காந்தி காங்கிரஸின் தலைமைப் பதவியை ஏற்க மறுத்த போது நரசிம்மராவ்விடம் அது தானாகப் போய்ச்சேர்ந்தது.

அப்போது மத்திய அமைச்சராக இருந்த சரத்பவாரின் பெயரும் பிரதமர் பதவிக்கு அடிபட்டது.

## மாற்றுக் கட்சியாக பாரதீய ஜனதா

றிருந்தது. அதில் ஆந்திராவிலும் கர்நாடகத்திலும் ஏற்பட்ட தோல்விகள் நரசிம்மராவ் அரசுக்கு பெரும் சவாலாக விளங்கின. தற்போது காங்கிரஸ் தோல்வி கண்ட மகாராஷ்டிரா, குஜராத் போன்று தெற்கில் ஆந்திராவும், கர்நாடகமும் முக்கியமானவை.

ஆகவே கடந்த டிசம்பரில் இருந்து தேர்தல் நடத்தப்பட்ட பத்து மாநிலங்களில் ஆறு மாநிலங்கள் எதிர்க்கட்சிகள் வசம் சென்று விட்டன.

109 வருட கால பழைமை வாய்ந்த காங்கிரஸ் கட்சி படிப்படியாக இந்தியாவின் மாநிலங்களை இழந்து வருவது நன்கு புலனாகிறது.

**காங்கிரஸ் மீண்டும் ஆட்சியை பிடிக்குமா?**

தற்போது இந்திய அரசியலில் எழுப்பப்பட்டு வரும் முக்கிய கேள்வி 1996 ஜூன் பொதுத்தேர்தலில் மத்தியில் காங்கிரஸ் கட்சி மீண்டும் ஆட்சியைக் கைப்பற்றுமா? என்பதே.

பிரதமர் நரசிம்மராவ் இருதயநோய் காரணமாக 1991 இல் அரசியலுக்கு முழுக்குப்போட இருந்தவர்— மூடை முடிச்சுகளுடன் புதுடில்லியில் இருந்து தனது சொந்த மாநிலமான ஆந்திராவுக்குச் செல்ல ஆயத்தமானபோது ராஜீவ் காந்தி

பின்னர் மாநில முதல்வர் பதவிக்காக மத்திய அமைச்சர் பதவியை விட்டு வந்த சரத்பவார் தற்போது மகாராஷ்ராவில் ஏற்பட்ட தோல்வி காரணமாக அரசி



நரசிம்மராவ்

யல் அந்தகாரத்தை எதிர்நோக்கி உள்ளார்.

சமீபத்தில் நடைபெற்ற மாநிலத் தேர்தல்களின் போது தமது திறந்த பொருளாதாரக் கொள்கையை வைத்துப் பிரசாரம் செய்த நரசிம்மராவ்வுக்கு இந்தியாவின் பொருளாதார மையமாகக் கருதப்படும் மகாராஷ்டிராவில் ஏற்பட்ட தோல்வி பலத்த அடியாகும். வெளிநாட்டு முதலீடுகளை இது பாதிக்கலாம்.

**திறந்த பொருளாதார கொள்கை**

1991 இல் பிரதமர் நரசிம்மராவ் பதவிக்கு வந்த போது இந்தியாவின் திறைசேரி அப்போதைய சோஷலிசம் தழுவிய பொருளாதாரக் கொள்கை காரணமாக அனேகமாக காலியாக இருந்தது.

ஆனால் பின்னர் நரசிம்மராவ்வின் திறந்த பொருளாதாரக் கொள்கைவெளிநாட்டு முதலீட்டாளர்களை ஊக்குவித்து இந்தியாவின் பொருளாதாரத்தை உயர்த்தி விட்டுள்ளது என்பதில் சந்தேகம் இல்லை.

இந்த பொருளாதாரச் சீர்திருத்தங்களால் இந்தியாவில் உள்ள மத்திய வர்க்கத்தினரே கூடிய நன்மை பெற்றுள்ளனர் என்று தெரிவிக்கப்படுகிறது.

பெரும்பாலும் ஏழை மக்கள் வாழும் கிராமப் புறங்களில் காங்கிரஸ் செல்வாக்குப் பெறத் தவறியதுக்கு இதுவே காரணம்.

தற்போது ஏற்பட்டுள்ள தேர்தல் தோல்வி காரணமாக தமது திறந்த பொருளாதாரக் கொள்கை கைவிடப் போவதில்லை என்று நரசிம்மராவ் அறிவித்துள்ளார். கட்சியைத் தொடர்ந்து வழிநடத்தப் போவதாகவும் அடுத்த பொதுத் தேர்தலில் தமது தலைமையின் கீழ் கட்சி வெற்றி பெறும் என்றும் நரசிம்மராவ் நம்பிக்கை தெரிவிக்கிறார் இந்தியாவின் 70 கோடி மக்கள் நன்மைபெறும் விதத்தில் அடுத்த பட்ஜட்டைத் தயாராக்கும் பணியை நிதி அமைச்சர் மன்மோஹன் சிங் மேற்கொண்டுள்ளார்.

**உட்கட்சிப் போராட்டம்**

சமீபத்தில் நரசிம்மராவ்வுக்கு ஏற்பட்ட முக்கிய பின்னடைவு உட்கட்சிப் போராட்டமே.

மத்தியில் பிரதமர் நரசிம்மராவ்வுக்கு அடுத்தவராகக் கருதப்பட்ட முன்னாள் மனித

வள அமைச்சர் அர்ஜுன் சிங் பிரதமர் நரசிம்மராவ்வினால் கட்சியிலிருந்து வெளியேற்றப் பட்டுள்ளார். நரசிம்மராவ் அரசுமுஸ்லிம்களையும், தாழ்த்தப்பட்ட மக்களையும் கைவிட்டுவிட்டதாக அர்ஜுன் சிங் பிரசாரம் செய்து வருகிறார்.

தற்போது காங்கிரஸ் கொள்கை வகுக்கும் கமிட்டியான காரியக் கமிட்டியில் இருந்து முன்னாள் மத்திய அமைச்சரும் உத்திர பிரதேச முன்னாள் முதல்வருமான என். டி. திவாரியும் வெளியேறி இருப்பது அர்ஜுன்சிங்கின் கரத்தைப் பலப்படுத்தி இருக்கிறது. ராவ் எதிர்ப்புப் பிரசாரத்துக்கு வாய்ப்பாகி விட்டது.

> பாரதிய ஜனதா சிவசேனை எழுச்சியால் இந்தியாவின் மதசார்பற்ற கொள்கைக்கு ஆபத்து.

அர்ஜுன் சிங்கை தனிமைப் படுத்தும் முயற்சியில் ராவ் தோல்வி கண்டுவிட்டார் என்றே கூறவேண்டும்—

சோனியா காந்தியை அரசியலுக்கு கொண்டு வருவது மூலம் ராவ்வை வீழ்த்தலாம் என்று நினைத்தார் அர்ஜுன் சிங்— ஆனால் சோனியா மறுத்து விட்டபோதிலும் அர்ஜுன் சிங்— திவாரி கூட்டு நரசிம்மராவ்வுக்கு தொடர்ந்து தலையிடியைக் கொடுக்கவே போகிறது.

அதுமட்டுமல்ல காங்கிரஸின் கையில் உள்ள சொற்ப மாநிலங்களில் ஒன்றான மத்திய பிரதேசத்தைச் சேர்ந்த 171 காங்கிரஸ் எம் பிக்களில் 90 பேர் சமீபத்தில் அர்ஜுன் சிங்கை மீண்டும் கட்சியில் சேர்க்கும்படி கட்சித் தலைமைப் பீடத்துக்கு மகஜர் அனுப்பி வைத்துள்ளனர்.

**திவாரியின் செல்வாக்கு**

அர்ஜுன் சிங்கைவிட்டாலும் என். டி. திவாரியை எப்படியாவது மீண்டும் கட்சிக்குள் சேர்த்துக்கொள்வதில் நரசிம்மராவ் உட்பட காங்கிரஸின் மூத்த தலைவர்கள் ஆர்வம் காட்டி வருகின்றனர்.

என். டி. திவாரி உத்தர பிரதேசத்தில் இன்னும் செல்வாக்குள்ள அரசியல் வாதியாகக் கருதப்பட்டு வருகிறார்.

1996 பொதுத் தேர்தலில் காங்கிரஸ் வாக்குகளுக்கு திவாரியின் பங்கு முக்கியமானதாகக் கருதப்படுகிறது.

1947ஆம் ஆண்டு இந்தியா சுதந்திரம் பெற்ற நாளில் இருந்து நேரு குடும்பத்தின் சொந்த மாநிலமான உத்தர பிரதேசமே பெரும்பாலான பிரதமர்களைத் தந்துள்ளது.

1977 ஆம் ஆண்டின் பின் மொரார்ஜிதேசாய், சரண் சிங், வி.பி.சிங் தவிர்ந்த ஏனைய பிரதமர்கள் காங்கிரஸ் கட்சிக்காரர்களே.

**சரியான தலைமை இல்லை**

இந்திய அரசியலில் பெரும் சக்தியாக இருந்து வந்த காங்கிரஸ் இன்று செல்வாக்கு இழந்து போவதற்கு முக்கிய காரணங்களில் ஒன்று சரியான தலைமை இல்லாததே.

சஞ்சேய் காந்தி விமான விபத்தில் கொலைப்பட்ட பின்பும் இந்திரா காந்தி, ராஜீவ் காந்தி படுகொலை செய்யப்பட்ட பின்பும் காங்கிரஸ் தனது கவர்ச்சியை இழந்து விட்டது.

தற்போதைய நிலையில் காங்கிரஸை மீண்டும் கட்டி எழுப்ப சோனியா காந்தியின் பங்களிப்பு அவசியம் என்று கருதுகிறார் நரசிம்மராவ். சோனியா காந்தி மறுத்து விட்ட போதிலும் சோனியா காந்தியின் ஆதரவாளர்களை அமைச்சர்களாக்குவதில் நரசிம்ம ராவ் ஆர்வம் காட்டி வருகிறார்.

சோனியா காந்தியை அரசியலுக்கு இழுப்பது மூலமே

**-சஞ்சாரன்-**

இந்த தீவிரவாதக் கட்சியான பாரதீய ஜனதாக் கட்சியின் எழுச்சியை ஓரளவுக்குத் தடுத்து நிறுத்த முடியும்.

சமீபத்தில் தேர்தல் முடிவுகள் மூலம் காங்கிரஸ் கட்சிக்கு மாற்றுக் கட்சியாக பாரதிய ஜனதா தன்னைக் காட்டிக் கொண்டுள்ளது.

தற்போதைய நிலை தொடருமானால் 1996 தேர்தலில் இந்தியாவில் தொங்கு நாடாளுமன்றமே ஏற்படும் நிலை உருவாகப் போகிறது. ★

---

# தண்ணீர், தண்ணீர்! நோய்களை அடியோடு அகற்றி விடும் தண்ணீர்!!

நாம் அன்றாடம் பருகும் சாதாரண குடிதண்ணீருக்கு ஏராளமான நோய்களைத் தீர்க்கும் மருத்துவ குணங்கள் இருக்கின்றன என்றால் நம்மில் பலருக்கு ஆச்சரியமாக இருக்கும்.

ஆச்சரியப்பட வேண்டாம். மருத்துவ உலகம் வெகுவாக முன்னேறி சாதனை புரிந்து வரும் இவ்வேளையில் குடி தண்ணீர் வைத்தியம் எல்லாம் வெகு சாதாரணம்! என்றாலும் அடி மனத்தில் இதை அறிந்து வைத்தால் அவ்வப்போது உதவும். முதலில் தண்ணீர் குணப்படுத்தும் நோய்கள் எவை என்பதைப் பார்ப்போம்!

தலைவலி, இரத்த அழுத்தம், சோகை, கீழ்வாதம், பக்கவாதம், ஊளைச்சதை, மூட்டுவலி, காதில் இரைச்சல், இதயத்துடிப்பு,மயக்கம், இருமல், ஆஸ்துமா, சளி, சயரோகம், மூளைக்காய்ச்சல், கல்லீரல் நோய்கள், வாய்வுக்கோளாறுகள், மூலம், சிறுநீர்க்குழாய்கள் நோய்கள், இரத்தக் கடுப்பு, மலச்சிக்கல், உதிரப்போக்கு, பித்தக்கோளாறு, நீரிழிவு, கண் நோய்கள், கண் சிவப்பு, முறை தவறிய மாதவிடாய், வெள்ளை, கருப்பை புற்று நோய், மார்பு புற்று நோய், தொண்டை நோய்கள் முதலிய நோய்களை தண்ணீர் அதன் போக்கில் உடம்பை விட்டு திறம்பட விரட்டிக் கொண்டு வெளியேறி விடுகிறது.

சரி, தண்ணீர் எப்படி இந்த வேலையைச் செய்கிறது? சரியான முறையில் சாதாரண தண்ணீரைக் குடிப்பதால் அது மனித உடலை சுத்தம் செய்கிறது. குடலை வலுவாக்குகிறது. மேலும் 'ஹேமடோபைஸிஸ்' (Haemato-paises) என்ற முறைப்படி உடலில் புது ரத்தத்தை உற்பத்தி செய்து, குடல் பகுதிக்கு செறிவூட்டுகின்றது.

அது எப்படி தண்ணீரால் புது ரத்தம் உருவாகும் என்ற சந்தேகம் எழலாம்? அதாவது சுத்தமான தண்ணீரினால் குடல் பகுதியில் உள்ள திசு மடிப்புகள் (Mucousal Folds) தூண்டப்படுகின்றன. இத்திசு மடிப்புகளின் தலையாயப்பணி நாம் சாப்பிட்ட அன்ன ரசத்தின் சாரத்தை உறிஞ்சுதல் ஆகும்.

தண்ணீரால் குடல் சுத்தமாக வைக்கப்படும் பொழுது, தினந்தோறும் பல தடவைகள் சாப்பிடும் ஆகார வகைகளின் சாரமானது இத்திசு மடிப்புகளால் உறிஞ்சப்பட்டு அவை புதுரத்தமாக மாற்றப்படுகின்றன. இப்புது ரத்தமானது நோய்களைக் குணப்படுத்தி மீண்டும் உடலுக்கு புது ஆரோக்கியத்தைக் கொடுக்கிறது. இதனாலேயே தண்ணீரை முறையாக அருந்துவது அவசியமாகின்றது.

இந்ததண்ணீர் சிகிச்சையை அனைவரும் வெகு எளிதில் செய்யலாம். இம்முறையில் சில கட்டுப்பாடுகளைப் பின்பற்றுவதுதான் வெகு முக்கியம்!

எப்படியெனில் —

1) காலையில் எழுந்தவுடன் பல் துலக்குவதற்கு முன்பாகவே 1·26 லீட்டர் (அதாவது 1260 சிசி) தண்ணீரை ஒரே தடவையில் குடித்து விட வேண்டும். அது சுமாராக ஐந்தரை அல்லது ஆறரை டம்ளர் அளவு தண்ணீர் தான் இருக்கும் குடித்த பிறகு கூட முகம் கழுவிக் கொள்ளலாம்.

ஒரே சமயத்தில் ஒன்றேகால் லீட்டர் தண்ணீரைக் குடிப்பது பலருக்கு சற்று சிரமமாக இருக்கும். என்றாலும் பிறகு பழகி விடும். அப்படிப் பட்டவர்கள் ஆரம்ப நாள்களில் தண்ணீரின் பெரும் பகுதியை எவ்வளவு முடியுமோ அவ்வளவு குடித்து விட்டு, இரண்டொரு நிமிடம் வெளியில் உலாவி விட்டு மறுபடி வந்து எஞ்சியுள்ள நீரைப் பருகி விடலாம்.

நடக்க முடியாமல் பலஹீனமாய் படுக்கையில் உள்ளவர்கள் சுவாசத்தை வேகமாக வயிற்றுப் பகுதி மூலம் சில தடவை பயின்று விட்டு எஞ்சியுள்ள தண்ணீரைப் பருகி விடலாம். ஆரம்ப கட்டத்தில் தண்ணீர் சாப்பிட்ட ஒரு மணி நேரத்தில் இரண்டு மூன்று தடவைகள் சிறுநீர் கழிக்க வேண்டி இருக்கும். பிறகு நாள்பட நாள்பட சகஜநிலைக்கு வந்து விடலாம்.

2. தண்ணீரைக் குடித்த பிறகு சுமார் ஒரு மணி நேரம் தேநீர், கோப்பி மற்றும் வேறு எவ்வித பானங்களையோ, பிஸ்கட், பழங்கள் போன்ற தின்பண்டங்களையோ சாப்பிடக்கூடாது இதுதான் மிக மிக அவசியமானதும், முக்கியமாக நடைமுறைப் படுத்த வேண்டிய விஷயமும் ஆகும்.

3. காலையில் [illegible] குடிப்பதற்கு தயாராகும் வகையில் முதல்நாள் இரவுச் சாப்பாட்டை முடித்தபிறகு படுக்கைக்குச் செல்லும் முன்பு நரம்பு மண்டலத்தைத் தூண்டி விடக்கூடிய பானங்களையோ, பொருள்களையோ எதையும் சாப்பிடக் கூடாது.

இதற்காக முதல் நாள் இரவே வேண்டுமானாலும் பல் துலக்கிக் கொள்ளலாம். தண்ணீரில் ஏதாவது கிருமிகள் இருக்கலாம் என சந்தேகிப்பவர்கள் முதல் நாளே காய்ச்சி வடித்து பத்திரப் படுத்திக் கொள்ளலாம்.

தண்ணீரின் வைத்திய மகத்துவத்தை திறம்பட ஆராய்ந்த ஜப்பான் மருத்துவக் குழு இவைகளையெல்லாம் கண்டறிந்து சமீபத்தில் வெளியிட்டதோடு, இத் தண்ணீர் சிகிச்சையால் ஒருசில நோய்களுக்கு காலக்கெடுவையும் நிர்ணயித்து வெளியிட்டுள்ளது.

அவையாவன,

1 மலச்சிக்கல் (Constipation) 1 நாள்

2 வயிறு பித்தம் & வாயுப் பொருமல் 2 நாட்கள் (Gastric Patoziz)

3. சர்க்கரை வியாதி (Diabetes) 7 நாட்கள்

4 இரத்த அழுத்தம் (B/P Hypertension) 4 வாரங்கள்

5. புற்று நோய் (Cancer) 4 வாரங்கள்

6. ஷயரோகம் (Pulmonary Tuberculosis) 3 மாதங்கள்

மேற்சொன்ன நோய் நிவாரணங்கள் [illegible] ஆரம்ப கட்டத்திலேயே [illegible] களுடன் பயன்படுத்துகிறவர்களுக்கு மட்டுமே கிட்டும் என்பதை மறுபடி இங்கு சுட்ட வேண்டியது இல்லை.

இவை தவிர உள்ள இதர நோய்களுக்கு நீர் வைத்தியம் மூலம் கிட்டும் காலக்கெடு நிவாரணத்தை நிர்ணயிக்க தீவிரமாக ஆராய்ந்து வருகின்றார்கள். இந்த நீர் சிகிச்சையை யார் வேண்டுமானாலும் பின்பற்றி எளிதில் வெற்றி காணலாம்.

ஆனால் மூட்டுவாதம் (Arthritis), வாயுப் பிடிப்பு (Rheumaitism) போன்ற நோய் உடையவர்கள் மட்டும் ஒரு வாரத்திற்கு தினமும் மூன்று தடவை அதாவது காலை, மதிய உணவிற்கு ஒருமணி நேரத்திற்கு முன்பும். அதேபோல் இரவு ஆகாரத்திற்கு ஒரு மணி நேரத்திற்கு முன்பும், இந்த தண்ணீர் சிகிச்சையைச் செய்து வர வேண்டும். ஒரு வாரம் கழிந்ததும் தினமும் காலையில் மட்டும் செய்து வந்தால் போதுமானது.

## மருத்துவம்

மேலும் இவர்கள் சாப்பிட்டு இரண்டு மணி நேரம் கழித்துத்தான் தண்ணீர் அருந்த வேண்டும் அதே போல் படுக்கைக்குச் செல்லும் முன்பு தேநீர், கோப்பி போன்ற பானங்களையோ, வேறு எந்த நச்சுப் பானங்களையோ அருந்தக்கூடாது.

காற்றிலேயே நச்சு கலந்து வியாதியைப் புகட்டும் இப்பரந்த பாவபூமியின் தற்போதைய காலகட்டத்தில், நெறிகெட்ட வியாதிகளுக்கு கண்ட கண்ட மருந்துகளை உட்கொண்டு, பக்க விளைவுகளை உடலில் உண்டு பண்ணிக் கொள்வதை விட, இயற்கை மருத்துவமாக இனிதே எல்லோருக்கும் கிடைக்கும் எளிய தண்ணீர் எவ்வளவோ மேல்!

என்ன, தண்ணீர் குடிக்க ஆரம்பித்துவிட்டீர்களா? ★

நன்றி — கலைக்கதிர்

---


## சிற்றூழியர் தேவை

சிற்றூழியர் பதவிக்கு விண்ணப்பங்கள் கோரப் படுகின்றன.

க. பொ. த சாதாரண தரம் சித்தியடைந்த 25 வயதுக்கும், 30 வயதுக்கும் உட்பட்டவர்கள் விரும்பத்தக்கது.

சிற்றூழியர்களாகப் பணிபுரிந்த முன் அனுபவம் உள்ளவர்களுக்கும், தோட்டவேலை செய்து அனுபவம் உள்ளவர்களுக்கும் முன்னுரிமை வழங்கப்படும்.

சிபார்சு செய்யக்கூடிய இருவரின் பெயர்களைக் குறிப்பிட்டு 07 - 04 - 1995 ஆம் திகதிக்கு முன்னர் விண்ணப்பிக்கவும்.

ஆளணி முகாமையாளர்,
உதயன் வெளியீட்டகம்,
நாவலர் வீதி
யாழ்ப்பாணம்

## வாரிவளவு நல்லியக்கச்சபை – காரைநகர்
## க. பொ. த. உயர்தரம்
## ஆவணி - 1994

மேற்படி பரீட்சையில் தோற்றி 260 புள்ளிகளுக்கு மேல் பெறுபேறுகளைப் பெற்ற காரை மாணவர்கள், பாடசாலை அதிபர் மூலம் பெறுபேறுகளை உறுதிப் படுத்தி, தமது ஆள் அடையாள அட்டையுடனும், சுய விவரத்துடனும் எதிர்வரும் 05 - 04 - 1995 புதன் கிழமை காலை 10 மணிக்கு "கமாலா களஞ்சியம்" இல: 24, நவீன சந்தை மேல்மாடி யாழ்ப்பாணம் என்ற முகவரியில் தொடர்பு கொள்ளவும்,

— செயலர்.

வாழ்த்துவோர்:

அழகு சாதனப் பொருள்களை மலிவு விலையில் பெற்று மலரும் புத்தாண்டை மகிழ்வுடன் கொண்டாட,

"சிவகாந்தா களஞ்சியம்"
நவீன சந்தை, (உட்புறம்)
யாழ்ப்பாணம்.

(36001)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சின்னஞ் சிறு விளம்பரம்

### விற்பனைக்கு

புதிய இரும்பு அலுமாரிகள் விற்பனைக்குண்டு. தொடர்பு: சனோ வெல்டிங் வேக்ஸ், 379, பீச்றோட், குருநகர், யாழ்ப்பாணம் (பாடுமீன் ச. ச. நிலையம் முன்பாக). [8464]

குறொம்ரன் மோட்டருடன் இணைக்கப்பட்ட கூவர் எலக்ட்ரிக் பம்ப் R. P. M. 2,800, 750 Wates உள்வாங்கி 1½'', வெளிவிடல் 1'' சொற்பகாலம் பாவித்தது. காட்சி அறைப்பாரவை தொடர்பு: 25, மார்ட்டின் வீதி. [35953]

பால் எடுக்கும் யமுனாபாரி ஆடுகளும் அவற்றின் இருபது நாட்கள் நிரம்பிய கடா, மறிக்குட்டிகளும் விற்பனைக்குண்டு. A. கனகசிங்கம், இல. 214, பருத்தித்துறை வீதி, ஆனைப்பந்தி, யாழ்ப்பாணம். [35979]

இரும்புத் தகடு, தண்ணீர்த் தாங்கி 8x4 1½ நால் தடிப்புள்ள இரும்புத்தகடு. 8x8x4 கன அடி தண்ணீர்த்தாங்கி, உருளை வடிவ தண்ணீர்த் தாங்கி என்பன விற்பனைக்குள்ளன. ''மில்க்வைற்'' (சி-880)

உயர் இன (High Brid) அல்சேஷன் குட்டிகள் விற்பனைக்குண்டு Father Black Alsasion Mother Big Borned Alsasion ச. பவளச்சந்தரன் (பெரியண்ணை) நாலுகால் மடம், ஆனைக்கோட்டை. (சி-954)

சாவகச்சேரி நகரசபை எல்லைக்குள் நான்கு பரப்பு காணியுடன் சகல வசதிகளும் அடங்கிய வீடு விற்பனைக்குண்டு பின்வரும் முகவரியுடன் தொடர்பு கொள்ளவும். க. சுப்பிரமணியம், மருதடி வீதி, சாவகச்சேரி. (35987)

நல்ல இன அலசேஷன் நாய்க்குட்டிகள் விற்பனைக்குண்டு தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி: வேலும் மயிலும் முறிவு தறிவு வைத்தியசாலை, மானிப்பாய் மேற்கு, கட்டுடை. (35989)

### காணி விற்பனைக்கு

மானிப்பாய் இந்துக் கல்லூரி முன் ஒழுங்கைக்குள் பரப்பு 2½ அளவுள்ள காணி விற்பனைக்கு உண்டு. தொடர்பு: நா. கணேசு, கிராம உத்தியோகத்தர், கனகசபை வீதி, மானிப்பாய். [8460]

### மாடெரு விற்பனைக்கு

மாட்டு எரு தொகையாக விற்பனைக்கு உள்ளது. மில்க்வைற். (சி-953)

### கோழிக்குஞ்சு விற்பனை

கோழிக்குஞ்சுகள் உடன் விற்பனைக்குண்டு. [Loman] சேவல் குஞ்சுகள் விலை 15/- பல்வம் வீசயூடாக சிங்கம் வீதி, உடுவில். [8304]

Golden Comet சிவப்பு பேட்டுக் குஞ்சுகள், சேவற் குஞ்சுகள் உடன் விற்பனைக்குண்டு நல்லூர் வீடியோ சென்ரர், இல. 19, முருகேசர் ஒழுங்கை, முத்திரைச் சந்தையடி, நல்லூர். [35984]

### வெற்றுப் போத்தல்

வெற்றுக் கோடியல் போத்தல் ஒன்று 10 ரூபா ஆகவும், வெற்று ஜாம் போத்தல் ஒன்று 8/- ரூபா ஆகவும் கொள்வனவு செய்யப்படும். தொடர்புகளுக்கு சுரபி நிறுவனம், கோப்பாய் தெற்கு கோப்பாய். வானவில், ஆரியகுளம் சந்தி, யாழ்ப்பாணம். [சி-869]

### புலமைப்பரிசில்

ஆண்டு 5புலமைப் பரிசில் பரீட்சை புதிய பாடத் திட்டத்திற்கு ஏற்ப வினாத்தாள்கள் 02-04-95 ஞாயிறு வெளியிடப்படும். அவற்றையும், ஆண்டு 3, ஆண்டு 4 வினாத்தாள்களையும் பெற்றுக் கொள்ளலாம். புதிய கல்வி நிலையம், இல. 219, நாவலர் வீதி, யாழ்ப்பாணம். [35965]

### O/L MATHS

G. C. E. [O/L]க் கட்டாய பாடமாகிய கணித பாடத்தில் ஆரம்ப அறிவில்லாதவர்களுக்கும், இதுவரையும் சித்தியடையாதவர்களுக்கும், தவணைப் பரீட்சைகளில் குறைந்த புள்ளிகளைப் பெற்றவர்களுக்கும் 28 வருட அனுபவமுடைய ஆசிரியரினால் 40 மணித்தியாலங்களில் Distinction பெறுமேறடையக் கற்பிக்கப்படும் ஆ. முருகநாதன், 10, கச்சேரி கிழக்கு ஒழுங்கை, ஸோகேந்திரா வீதி, சுண்டிக்குளி. [8466]

### ஜோதிட விஞ்ஞானம்

குரு ராகு பார்வைகளால் யுத்தச் செவ்வாய் சமாதானத்தை நோக்கி நகர்த்தும். சூரிய உஷ்ண அதிகரிப்பால் ஏப்ரல் 15 வரை வடக்கில் வெப்ப நோய்கள் பரவும் சாத்தியமுண்டு. புத்தாண்டு பலன்கள் விற்பனையாகின்றன. (சத்யா - கட்டுரை) (8310)

### தேவை

வயதான கணவன் மனைவி இருவருக்கும் வீட்டோடு இருந்து சமையல் வேலையும் ஏனைய வீட்டுப் பணிவிடைகளும் செய்ய 35-50க்கும் இடைப்பட்ட தகுதியான பெண் உடன் வரவும். தகுந்த சம்பளம் கொடுக்கப்படும். 25, மாட்டின் வீதி. [35954]

கொக்குவில் கிழக்கில் அமைந்திருக்கும் தையல் நிலையத்திற்கு தைக்கக்கூடிய அனுபவமுள்ள பெண் தேவை. தொடர்பு: பிறவுண் வீதி, ரயில்வே ஸ்ரேசன் முன்பாக. கொக்குவில் கிழக்கு, கொக்குவில். [35997]

### மணமகன் தேவை

கனடாவில் உத்தியோகம் வகித்து சமீபத்தில் வரவிருக்கும் யாழ். இந்து. 37 வயதுடைய அச்சுவினி 1ம் பாதம், மிதுன லக்கினம், இரகபாவம் 28, செவ்வாய் குற்றமற்ற, அழகான 5' 3'' உயரமுடைய மணமகளுக்கு பொருத்தமான மணமகன் பெற்றார் தேடுகின்றனர். தொடர்பு: இல. 7, விபுலானந்த வீதி, கொழும்புத்துறை. [35952]

### 'ஒளிவீச்சு'

யாழ்ப்பாணம். ஏப். 1 நிதர்சன நிறுவனத்தின் மாதாந்த வீடியோ சஞ்சிகையான ''ஒளிவீச்சு'' பெபரவரி மாதத்திற்கான ஒளிநாடா வெளிவந்து விட்டது

இதில் சிங்கள அரசின் அசமந்தப் போக்கைக் கண்டித்து நடந்த மாபெரும் ஆர்ப்பாட்டப் பேரணி. போர் இடைநிறுத்த கண்காணிப்புக் குழுவின் வெளிநாட்டுப் பிரதிநிதிகள் தமிழீழ தேசியத் தலைவரைச் சந்தித்தமை. 'என்று தனியும்?'' எனும் குறும்படம்; கலை நிகழ்ச்சிகள் மற்றும் பழமையான அம்சங்களும் இந்த ஒளிநாடாவில் இடம் பெற்றுள்ளன

இன்று ஞாயிற்றுக்கிழமை மாலை 6.00மணிக்கு யாழ். ஸ்ரீதர் திரையரங்கில் இலவசக் காட்சியாக இது காண்பிக்கப்படும். [ஒ]

## 1-ம் ஆண்டு நினைவஞ்சலி



| மலர்வு: | உதிர்வு: |
|---|---|
| 02 | 14 |
| — | — |
| 12 | 04 |
| — | — |
| 1932 | 1994 |

### திருமதி இராசா. அன்னபூரணம்
(மாம்பழம்)

திதி: 02-04-1995

நீங்கள் எம்மைவிட்டுப் பிரிந்து ஆண்டொன்று சென்றாலும் உங்கள் நினைவுகள் என்றும் எம் மனத்திரையில் பசுமையாக நிலைத்திருக்கும்.

உங்கள் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கும்;

கணவன், மகன், மருமகள்,
பேர்த்தி, சகோதரி, பெறாமக்கள்,
சம்மந்தி மச்சான்மார்
உற்றார், உறவினர்கள்.

குளப்பிட்டி லேன்,
கொக்குவில் கிழக்கு,
கொக்குவில். (8465)

## விமான தொடர்புச் சேவை

### யாழ்ப்பாணத்தில் இருந்து கொழும்புக்கு
### விமான தொடர் அம்பியூலன்ஸ் இணைப்பு

சேவை ஆரம்பிக்கப்பட்டுள்ளது என்பதை மகிழ்ச்சியுடன் அறியத்தருகின்றோம்.

பயணப்பதிவு செய்யும் நேரம்:
காலை 9-00 முதல் மாலை 5-00 வரை

குறிப்பு:
நோயாளர்களுக்கும், வயோதிபர்களுக்கும் முன்னுரிமை வழங்கப்படும்.

ஒரு வழிக் கட்டணம் ரூபா 3,500
[ விமானக் கட்டணம் உட்பட ]

தர்மிஷா ரவல்ஸ், குமரன் பயணிகள் விடுதி,
அறை இல. 6,
67, அருச்சுனா வீதி (ஸ்ரான்லி வீதி), யாழ்ப்பாணம்

குறிப்பு:- திங்கள், வியாழன் நாட்களில் மட்டும் சேவை நடைபெறும் (சி-781)

---

யாழ். வை. எம் சி. ஏ. தலைவரும்,
யாழ். பிராந்திய வை. எம். சி. ஏ. ஒன்றியத்தின்
உபதலைவர்களில் ஒருவருமான,
வைத்திய கலாநிதி

## ரி. டபிள்யு. ஜெயகுலராஜா

1995ஆம் ஆண்டிற்கான
**அகில இலங்கை கம்பன் கழகத்தினால்**
வழங்கப்படும்
மகர யாழ் விருதைப் பெறுவதை
பெரும் மகிழ்வுடன் பாராட்டுகின்றோம்

அங்கத்தவர்கள், ஊழியர்கள்,
இயக்குநர் சபை உறுப்பினர்கள்,
உடுவில் வை. எம். சி, ஏ.

(35993)

---

The Regional Council of Y. M C. As North
Salutes its Vice President

**Dr. T. W. JEYAKULARAJAH**

on being awarded

## "MAHARA YARL VIRUTHU - 1995"

**Member Y. M. C. A. S**

Jaffna Y. M. C. A.
Navaly Y. M C A.
Pandaterruppu Y M. C. A.
Manipay Y. M. C. A.
Uduvil Y. M C A.
Jaffna College Y. M. C. A.
Kayts Y. M. C. A.
Point Pedro Y. M. C. A.

[35993]

---

## முக்கிய அறிவித்தல்
### நெல்லியடி வாணிபர் கழகம்

எமது வாணிபர் கழகத்தின் செயற்பாட்டு எல்லைகளாக கரவெட்டி பிரதேச செயலகத்துக்குட்பட்ட கீழ்காணும் பத்தொன்பது (19) கிராம அலுவலர் பிரிவுகள் உள்ளடங்குகின்றன அவையாவன;

(1) கரணவாய் தெற்கு J/348 (2) கரணவாய் J/350 (3) கரணவாய் கிழக்கு J/351 (4) கரணவாய் மத்தி J/362 (5) கரவெட்டி மேற்கு J/363 (6) கரவெட்டி வடக்கு J/364 (7) கரணவாய் தெற்கு J/365 (8) மத்தொனி J/366 (9) கரவெட்டிமத்தி J/367 (10) கரவெட்டி கிழக்கு J/368 (11) கட்டைவேலி J/369 (12) துன்னாலைதெற்கு J/370 (13) துன்னாலை கிழக்கு J/371 (14) துன்னாலை மேற்கு J/374 (15) நெல்லியடி வடக்கு J/375 (16) நெல்லியடி J/376 (17) நெல்லியடி கிழக்கு J/377 (18) அல்வாய் தெற்கு J/379 (19) அத்தாய் J/381.

மேற்குறித்த கிராம அலுவலர் பிரிவுகளிலுள்ள அனைத்து வர்த்தகர்களும் 01-05-95க்கு முன்னர் நெல்லியடி வாணிபர் கழகத்தில் அங்கத்தவர்களாகத் தமமைப் பதிவு செய்துகொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறோம். மேலதிக விவரங்களுக்கு கழகத் தலைவர் அல்லது செயலாளருடன் தொடர்பு கொள்ளவும்.

தங்கள் ஒத்துழைப்புக்கு நன்றி:

மா. கனகராசா
தலைவர்.

அன்ரன் செல்வராசா
செயலாளர்.

நெல்லியடி வாணிபர் கழகம்,
கரவெட்டி. (35981)

## ஓராண்டு நினைவஞ்சலி



| தோற்றம்: | மறைவு: |
|---|---|
| 12 | 15 |
| — | — |
| 02 | 03 |
| — | — |
| 1931 | 1994 |

### கணபதிப்பிள்ளை சண்முகம்
(ஐயாத்துரை)
[இளைப்பாறிய புகையிரத கங்காணி]

திதி: 02-04-1995

எங்கள் பாசமிகு அப்பாவே! அன்புத் தெய்வமே! வந்தது வினை உமக்கு - இந்த வையகத்தில் ஒரு புதுமையென காலனின் கயிற்றுடன் கடும்சமர் கொண்டு தோல்வி கண்டோம் - நொந்தவர்களானோம் நீங்கள் கொடிய நோயினால் எம்மிடமிருந்து அபகரிக்கப்பட்ட வெண்ணிலவு. பாரினில் நீங்கள் எம்முடன் வாழ்ந்து பண்பையும், அன்பையும் கொட்டிக் குவித்த நாளினை எமக்காரளிப்பார் இனி. உங்கள் ஆத்மா சாந்திக்காக பிரார்த்திக்கிறோம்.

உங்கள் பிரிவால் துயருறும்:
மனைவி, மக்கள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.

[illegible]
சுன்னாகம் வடக்கு,
சுன்னாகம். (8305)

---

## பணிநிலை வெற்றிடம்

கீழ் தரப்படும் பதவிக்குரிய வெற்றிடங்களை நிரப்புவதற்கு 15-04-1995 ஆம் திகதி வரை பொருத்தமான அபேட்சகர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

### பொதுத் தகைமைகள்

1. தமிழீழப் பிரஜையாக இருத்தல் வேண்டும்.
2. பொருத்தமான கல்வித்தராதரம் உடையவராகவும், தேகாரோக்கியம் உடையவராகவும் இருத்தல் வேண்டும்.
3. வயதெல்லை 20 - 40 வருடங்கள்

1. **கணக்காளர்**
   அங்கீகரிக்கப்பட்ட நிறுவனமொன்றில் பட்டயக் கணக்காளர் தராதரம் அல்லது ஐக்கிய இராச்சிய சர்வதேச கணக்கியல் டிப்புளோமா சான்றிதழ் அல்லது சமமான தராதரம் பெற்றிருத்தல் வேண்டும். 5 வருடத்திற்கு மேற்பட்ட அங்கீகரிக்கப்பட்ட நிறுவனமொன்றில் கணக்காளராக இருந்த அனுபவம் மேலதிக தகைமையாகக் கணிக்கப்படும்.
2. **கணக்கு எழுதுநர்**
   கல்விப் பொதுத் தராதரப் பத்திர உயர்தரப் பரீட்சையில் கணக்கியல், வர்த்தகம், பொருளியல் ஆகியவற்றில் சித்தி பெற்றிருத்தல் வேண்டும்.
3. **திட்டமிடல் அலுவலர்**
   அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகமொன்றில் கலைமாணி அல்லது முகாமைத்துவப் பட்டம் பெற்றிருத்தல் வேண்டும் முகாமைத்துவப் பட்டம் பெற்றவர்களுக்கு விசேட சலுகை வழங்கப்படும்.
4. **வெளிக்கள அலுவலர்**
   க. பொ. த (உயர்தர) பரீட்சையில் சித்தி பெற்றிருக்க வெண்டும்.

★ விண்ணப்பங்கள் யாவும் சுயவிவரத்துடன் எழுத்து மூலம் கீழ் தரப்படும் முகவரிக்கு தட்டச்சுத்தாளில் சொந்தக் கையெழுத்தில் அனுப்பப்படல் வேண்டும்.
★ சம்பளம் பேசித் தீர்மானிக்கப்படும்:
★ தேவைப்படின் தங்குமிட வசதியும் செய்து தரப்படும்.
★ விண்ணப்பதாரர்கள் நேர்முகப் பரீட்சை ஒன்றின் மூலம் தேர்ந்தெடுக்கப்படுவார். அதற்கான திகதி பின்னர் அறிவிக்கப்படும்.
★ விவசாயம், கடல்வளம், விலங்கு வேளாண்மை, சூழல் பாதுகாப்பு, வனவளம் ஆகியவற்றில் பயிற்சி அனுபவம் உள்ளவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்.

விண்ணப்பிக்க வேண்டிய முகவரி:

பொது முகாமையாளர்,
விவசாயம்/சூழல் பாதுகாப்புப் பகுதி,
**தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனம்**
தாவடி, தமிழீழம்.

[சி-870]

## ஜப்பான் கராட்டி அசோசேசன் சோட்டோகான் சிறீலங்கா

கராத்தே நேர்முகப் பரீட்சை இன்று 02-04-95 நண்பகல் 12 மணிக்கு சுன்னாகம் மான்ஸ் பாடசாலையில் நடைபெறும்.

சான்றிதழ்கள் உயர் பரீட்சையாளர்
க. இராமச்சந்திரன் 6ஆவது கறுப்புப்பட்டி
அவர்களால் வழங்கப்படும்
கராத்தே போதனாசிரியர் க. கேதீஸ்வரன்
கறுப்புப்பட்டி

(8308)

## கண்ணீர் அஞ்சலி

எமது பாடசாலை அதிபர்
அருட்செல்வி எம். ஜெறோம் A.C
அவர்களின் அன்புச் சகோதரர்

**அமரர்**
**ஜோசவ் பொன்னையா சிங்கராயர்**

அவர்களின் மறைவையொட்டி எமது நெஞ்சம் நெகிழ்ந்த கண்ணீர் அஞ்சலியைச் செலுத்துகின்றோம்

அன்னாரின் பிரிவால் துயருறும் குடும்பத்தினருக்கும் எமது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

ஆசிரியர்கள், மாணவர்கள்.
யா/ புனித ஜோண் பொஸ்கோ
வித்தியாலயம்,

[35999]

## கண்ணீர் அஞ்சலி

எமது ஆலய பங்குத்தந்தை,
அருட்திரு J. P. E. செல்வராஜா
அவர்களின் சகோதரர்

**J. P. சிங்கராயர்**

இறைவனடி சேர்ந்து விட்டார். அவரின் சகோதரருக்கும், அன்னாரின் குடும்பத்தினருக்கும் எமது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

புனித சிசிலியாள் பாடகர் குழாம்,
புனித யுவானியார் பங்கு,
சுண்டிக்குளி.

(35994)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
292/2 காவலர் வீதி
யாழ்ப்பாணம்

## பாரதூரமான ஒப்பந்த மீறல்

அரசுக்கும் தமிழீழ விடுதலைப் புலிகளுக்கும் இடையில் மோதல் தவிர்ப்பு ஒப்பந்தம் நடைமுறைக்கு வந்த பின்னர், ஒப்பந்த மீறலில் இரண்டாவது களப்பலி இடம் பெற்றிருக்கிறது.

ஜனவரி 8 ஆம் திகதி மோதல் தவிர்ப்பு ஒப்பந்தம் நடைமுறைக்கு வந்தது.

ஜனவரி 19 ஆம் திகதி முற்பகலில் மன்னாரில் விடுதலைப் புலிகளின் ஆதரவாளர் ஒருவரை 'புளொட்' குழுவினர் சுட்டுக் கொன்றனர்.

அதன் பின்னர், கடந்த 29 ஆம் திகதி விடுதலை புலிகள் இயக்கப் போராளியான லெப்டினன்ட் சிறினிவாசனை மண்டூர் குருமண் வெளியில் வழிமறித்த ஸ்ரீலங்காப் பொலீஸார், அவர் தம்மை விடுதலைப் புலிகள் இயக்கப் போராளி என அடையாளம் காட்டிய பின்னரும் கடுமையாகத் தாக்கினர். அந்தத் தாக்குதலினால் சயனைட் அருந்தி வீரமரணமடையும் நிலைக்கு அவர் தள்ளப்பட்டார்.

போர் தவிர்ப்பு ஒப்பந்தத்தை தமிழீழ விடுதலைப் புலிகள் மிக இறுக்கமாகக் கடைப்பிடித்து வருகின்ற இவ்வேளையில் —

அவர்களைச் சீண்டுகின்ற தோரணையில் ஸ்ரீலங்காப் படைகள் செயற்பட்டு வருவது கண்கூடு. அத்தகைய செயற்பாட்டின் விளைவே இந்த இரு மரணங்களுமாகும்

சமாதானப் பேச்சுக்களில் ''நாளொரு பேச்சும் பொழுதொரு வாக்குறுதியும்'' அளித்துக்கொண்டு, அவற்றைச் செயற்படுத்தாமல் அரசுத் தலைமைப்பீடம் தமிழரை ஏமாற்றிக் கொண்டிருக்க—

மோதல் தவிர்ப்பை கடைப்பிடிக்கின்றோம் எனக் கூறி வெளியே பிரசாரம் செய்து கொண்டு யுத்த செயற்பாடுகளில் ஈடுபட்டுக் கொண்டிருக்கிறது ஸ்ரீலங்காப் படைகள்.

''முகாம்களைச் சூழவுள்ள 400 மீற்றர் பாதுகாப்புப் பிரதேசத்தில் அங்கே நடமாடினார்கள் புலிகள்; இங்கே ஆயுதங்களுடன் சென்றனர்; அந்த இடத்தில் பங்கர்கள் கட்டுகிறர்கள்; இந்த இடத்தில் தளம் அமைக்கின்றார்கள் — என்று நாளொரு புளுகும் பொழுதொரு புனைகதையும் பிரசுரித்துக் கொண்டு—மீண்டும் ஒரு பெரும் யுத்தம் வெடிப்பதற்கு திரி வைத்தும் காத்து நிற்கும் — தென்னிலங்கை இனவாதப் பத்திரிகைகள், லெப்டினன்ட் சிறினிவாசனின் வீரச்சாவு குறித்து என்ன கூறப்போகின்றன?

நடக்காத சம்பவங்களையே மோதல் தவிர்ப்பு மீறல் சம்பவங்களாக வர்ணிக்கும் இந்த விஷமப் பிரசாரகர்கள் இப்போது சிங்களப் பொலீஸாரின் மோதல் தவிர்ப்பு மீறல் நடவடிக்கையால் ஒரு போராளி வீரச்சாவு அடைந்த சம்பவத்தை எப்படி வர்ணிக்கப் போகின்றன?

அச்செய்தியை இனவாதப் போக்கில் திரித்துக் கூறி, போருக்குத் தூண்டப் போகின்றனவா? அல்லது உண்மையைக் கூறி சிங்களப் படைகளின் அடவாடித்தனமான போக்கை — போர் வெறியை — தென்னிலங்கை மக்களுக்கு அம்பலப்படுத்தப் போகின்றனவா?

விடுதலைப் புலிகள் தமது மறைவிடங்களில் இருந்து தாராளமாக வீதிகளுக்கு வருகிறார்கள். சில சந்தர்ப்பங்களில் தங்கள் ஆயுதங்களை இராணுவத்திடம் ஒப்படைத்துவிட்டு, தாங்கள் காட்டுக்குப் போகும்போது அவற்றை திருப்பி வாங்கிக் கொண்டு போகிறார்கள் என்று—

ஜனாதிபதி சந்திரிகா இந்தியாவில் பெருமையாகக் கூறிவிட்டு கொழும்பு திரும்புவதற்கு முன்னர்—

பொலீஸார் மிகப் பாரதூரமான மோதல் தவிர்ப்பு மீறலில் ஈடுபட்டிருக்கிறார்கள்.

இது தற்செயலாக நடைபெற்றது என்று கூறித் தப்பிக்கொள்ள முடியாது. இது குறித்து மன்னிப்புக் கேட்டாலும் சமாதானச் சூழலுக்கு உண்டாக்கப்பட்ட குந்தகம் இலகுவில் மாறாது.

இனிமேல் இத்தகைய சம்பவங்கள் தடுக்கப்படாவிட்டால், மோதல் தவிர்ப்பை முறிப்பதற்கு படையினர்— அரசினர் — தயாராகிறார்கள் என்பதே அர்த்தம்!

# அதிகாரத்தனம் சமாதானம் காண உதவாது; சமரசப் பேச்சுக்கு நெகிழ்ச்சிப் போக்குத் தேவை

தை பிறந்தால் வழி பிறக்கும் என்பது தமிழர்களின் நம்பிக்கை. ஆனால் ஸ்ரீலங்கா அரசாங்கத்துக்கும் தமிழீழ விடுதலைப் புலிகளுக்கும் இடையிலான சமாதானப் பேச்சுவார்த்தை குறித்து அந்த நம்பிக்கை நிறைவேறவில்லை.

தை பிறப்பதற்கு முதல் நாள் நடைபெற்ற மூன்றாம் கட்டப் பேச்சுவார்த்தை விரைந்து தொடரும்; நல்ல பெறுபேறுகள் கிடைக்கும்; என்ற எதிர்பார்ப்புக்கள் வீணாகின. இரண்டரை மாதங்கள் கழிந்தும் நான்காவது கட்டப் பேச்சுக்கள் நடப்பதற்கான திகதி நிர்ணயிக்கப்படாத ஒரு தேக்க நிலையே நேற்று வரை இருந்தது.

சித்திரைப் புத்தாண்டு இப்போது வாசலில் வந்து எட்டிப் பார்க்கிறது. இன்னும் இரண்டு வாரங்களில் புதுவருடம் பிறக்கப்போகிறது. சித்திரைப் புதுவருடத்தை தமிழர்களும், சிங்களவர்களும் விமரிசையாகக் கொண்டாடுவது வழக்கம். ஈர் இனமக்களும் தமது கலாசாரம், பண்பாடுகளைப் போற்றிக் கொண்டாடும் காலம் இது.

## முன்னுக்குப் பின்முரணாகப் பேசின் பின்னடைவே பெரிதும் மிஞ்சும்

தையில் தவறிய முன்னேற்றம் சித்திரைப் புதுவருடத்தோடாவது உண்டாகுமா என்று கேட்கும் அளவுக்கு கடந்த இரண்டரை மாதங்களும் மந்த நிலை நீடித்தது.

மூன்றிலிருந்து நான்காவதற்கு செல்வதில் பெரும் தடங்கல்களும், தடைகளும் ஏற்பட்டிருந்தன. பேச்சுவார்த்தை சம்பந்தமாக அரசாங்கம் தனது அணுகுமுறையைத் திடீரென மாற்றியதே இதற்குக் காரணம்.

தமிழ் மக்களின் அன்றாடப் பிரச்சினைகளைத் தீர்க்காமல், பெயருக்கு அவற்றைத் தொட்டுவிட்டு, அரசியல் தீர்வு குறித்துப் பேசுவதற்கு அரசாங்கம் அவசரப்பட்டதே இந்தத் தடங்கலுக்குப் பிரதான காரணம்.

### காலம் கரைகிறது

ஆனால் —

தமிழ் மக்களின் அன்றாடத் தேவைகளை நிறைவேற்றி விட்டதாகவும், விடுதலைப் புலிகளே புதிது புதிதாக நிபந்தனைகளைப் முன்வைக்கிறார்கள் என்றும் அரசாங்கம் தனக்குள்ள பிரசார வளத்தைப் பயன்படுத்தி தனது நிலைப்பாட்டை சரியெனக் காட்ட முயன்றதாலேயே காலம் கரைந்து போயிற்று

வெறும் விதண்டா வாதத்திலும், பிரசாரத்திலும் ஈடுபடுவதால் சமாதானத்தை எட்ட முடியாது, அமைதியை உருவாக்க முடியாது என்பதனை அரசு இப்பொழுது ஓரளவு உணர்ந்து கொண்டு தமிழ் மக்களின் அன்றாடப் பிரச்சினையைத் தீர்ப்பதில் நாட்டம் செலுத்தியுள்ளது எனலாம். எரிபொருள் தடையை நீக்குவதாகவும், மீன்பிடித் தடையை முற்றாக நீக்குவதாகவும் அரசு வாக்குறுதி அளித்திருக்கிறது.

தமிழ் மக்களின் அன்றாடப் பிரச்சினைகளைக் களையா

## சந்திரிகா இதனை உணர்வது எப்போது?

விடில் சமாதானப் பேச்சுக்களைத் தொடர்வதா இல்லையா என்பது குறித்து மிகவும் வேதனையான முடிவை எடுத்துக் கொள்ள நிர்ப்பந்திக்கப் படுவோம் — என்று தலைவர் பிரபாகரன் விதித்த காலக்கெடு கண்டு அரசு இறங்கி வந்தது என்பதில் சந்தேகமில்லை.

### ஒன்றும் ஒன்பதும்

ஒன்றைக் கொடுத்து ஒன்பதை வழங்கியதாகக் கூறும் பாணியில் அரசின் போக்கு அமைந்திருந்தது. வடபகுதி மக்களுக்குத் தேவையான சகல பொருள்களும் அனுப்பப்படுவதாகவும், புனரமைப்பு வேலைகளைச் செய்யப் போவதாகவும் அமர்க்களப் படுத்திய அரசு, இப்போது அதனைக் குறைத்துவிட்டதாகச் சொல்வதற்கில்லை.

இந்தியா சென்றிருந்த வேளை ஜனாதிபதி சந்திரிகா தூரதர்ஷன் தொலைக்காட்சிச் செய்தியாளருக்கு நீண்ட செவ்வி ஒன்றைக் கொடுத்திருந்தார். அதில் தமிழர்களின் அன்றாடப் பிரச்சினை சம்பந்தமாக அரசாங்கம் பெரிதாகச் செய்து விட்டதாக ''வெளுத்து வாங்கி'' யிருக்கிறார்!

ஆனால் உண்மை அதுவல்ல என்பதனை கொழும்பிலிருந்து யாழ்ப்பாணம் வந்து திரும்பிய அரசாங்க எம்.பிக்களும், பத்திரிகையாளர்களும் மிக வெளிப்படையாக கூறியுள்ளனர்.

அதனைத் தொடர்ந்து அரசாங்கம் தனது பிரசாரத்தினை வேறுவிதமாக மாற்றியுள்ளது. வடபகுதிக்கு அதிக எண்ணிக்கையான லொறிகளை அனுப்பும் வகையில் சோதனைச் சாவடிகள் புதிதாகத் திறக்கப்படுவதாகக் கூறுகிறது.

### புத்தாண்டும் பொருள்களும்

புத்தாண்டையொட்டி வடக்கே தாராளமாகப் பொருள்கள் போய்ச் சேருவதற்கு ஏற்பாடு செய்யப்

அரசியல்

பட்டிருப்பதாக வானொலியிலும் தொலைக்காட்சியிலும் பிரசாரம் செய்யப்படுகிறது. ஆனால் பொருள்கள்தான் வந்து சேருவதாக இல்லை!

வடபகுதி மக்களுக்குத் தேவையான பாவனைப் பொருள்கள் தாராளமாகக் கிடைக்க வேண்டுமாயின் தரைப்பாதை ஒன்று அவசியம். ஆனால் அந்தப் பாதையை திறப்பது இராணுவ நலன் தொடர்புடையதுஎன்றுஅரசாங்கம் சொல்கிறது!

பூநகரி இராணுவ முகாமை அகற்ற வேண்டும் என்ற விடுதலைப்புலிகள் கோரிக்கை இராணுவத் தன்மை உடையது. சமாதானம் உண்டான பின்னரே நாம் அந்த முகாமை அகற்ற முடியும். எங்களைப் பொறுத்த வரையில் மிகப் பெரியளவில் நாங்கள் செய்து விட்டோம் என்றே நான் நினைக்கின்றேன். பொருளாதாரத் தடையை நீக்கி விட்டோம்; மீன்பிடித்தடையை நீக்கி விட்டோம்; பாதைகளைத் திறந்துவிட்டோம்— என்று சந்திரிகா தமது தூரதர்ஷன் செவ்வியில் குறிப்பிட்டிருக்கிறார்!

### பொய் கூறுவதை நிறுத்த வேண்டும்

இந்தப் பொய் கூறும் நிலை மாற வேண்டும். அப்போது தான் சமாதானப் பேச்சுக்களில் முன்னேற்றம் உண்டாகும்.

அரசாங்கம் வெறும் வாய்ச் சொல்லில் நின்று சமாதானத்தைக் காண முடியாது. அதற்கான சூழ்நிலையைத் தோற்றுவிக்க வேண்டும். ஆனால் தனக்குத் தேவைப்படும் சில இராணுவ நலன்களை முன்னிறுத்தி சமாதானச் சூழ்நிலையைத் தோற்றுவிக்க அரசு பின்னடிக்கிறது.

அரசாங்கத்தின் இந்தப் போக்கில் பெரிதாக மாற்றம் ஏற்படாத நிலையில், நான்காம் கட்டப் பேச்சுவார்த்தையில் அரசியல் தீர்வு குறித்தும் ஆராயப்படும் என்று ஜனாதிபதி அறிவித்துள்ளார்.

இந்தியா, பங்களாதேஷ் விஜயங்களை முடித்துக் கொண்டு நாடு திரும்பிய பின்னர் நடத்திய செய்தியாளர் மாநாட்டில் —

வடபகுதி மக்களுக்கு எவ்வளவு வசதி தேவையோ அவை அனைத்தையும் வழங்க அரசாங்கம் விரும்புகிறது — என்று சந்திரிகா கூறியிருக்கிறார். ஆனால் செயலளவில் அது உண்மையானதா என்பதே கேள்விக்குரியதாகும்.

### பெறுபேறு பின்னடைவே

சமாதான முயற்சிகள் குறித்து அவர் தெரிவித்த தகவல்களை செவிமடுத்த செய்தியாளர்கள் சமாதான முயற்சியில் முன்னேற்றம் ஏற்படவில்லை; பின்னடைவே உண்டாகியுள்ளது. என்று மதிப்பிட்டுள்ளனர். அதுவே உண்மையுமாகும்.

முன்னேற்றம் கண்டிருப்பதாக சந்திரிகா இந்தியாவில் கூறியது உண்மையானால், வடபகுதி மக்களின் வாழ்க்கை இப்போது இயல்பு நிலைக்கு வந்திருக்கும்; அரசியல் விவகாரம் குறித்த பேச்சும் ஆரம்பமாகியிருக்கும்.

தாமதமும், தடங்கலும் தனது பக்கத்தில் இருக்க

## தமிழர் பிரச்சினையை தீர்க்கா விடில் அரசாங்கத்தின் வீழ்ச்சி நிச்சயம்

பேச்சுவார்த்தையில் எவ்வாறு முன்னேற்றம் காண முடியும் என்பதனை அரசு தன்னைத் தானே திரும்பிக் கேட்க வேண்டும்.

அவ்வாறு செய்யாமல், சொல்லுக்கும் செயலுக்கும் இடையில் மிகப் பெரிய, நீண்ட இடைவெளியை வைத்துக் கொண்டு, பேச்சில் முன்னேற்றம் காணமுடியும் என்று எவ்வாறு எதிர்பார்ப்பது?

இத்தகைய அசமந்தமும், தாமதமும், விதண்டாவாதப் போக்கும், அரசாங்கத்துக்கு இருப்பதாகச் சொல்வதற்குப் பதிலாக சந்திரிகா வுக்கு உண்டு என்று கூறுவதே பொருத்தம்.

சமாதானப் பேச்சு வார்த்தை சம்பந்தப்பட்ட விவகாரத்தை தான் மட்டுமே சந்திரிகா கையாள்கிறார் என்பதால் அதன் பின்னடைவுக்கு அவரே முழுக்க முழுக்கக் காரணம் எனலாம். இது விடயத்தில் அவர் அமைச்சர்களைக் கலந்தாலோசிப்பதில்லை; தமக்கு நெருங்கிய ''ஆலோசகர்கள்'' கூறுவதைக் கேட்டே செயற்படுகிறார்; அதனால் அமைச்சர்கள், எம். பிக்கள் மட்டத்தில் பெரும் அதிருப்தி நிலவுகிறது என்று இப்பத்தியில் ஏற்கனவே (5.3.95 இதழில் குறிப்பிட்டிருந்தோம்.

### அமைச்சர்களும் ஆலோசகர்களும்

அதனை உறுதி செய்யும் விதத்தில், மூத்த அமைச்சரும், சந்திரிகா அரசியலில் முன்னுக்கு வருவதற்கு பின்னணியில் உழைத்தவருமான ரட்ணசிறி விக்கிரமநாயக்கா கொழும்பு சிங்களப் பத்திரிகை ''லக்பிம''வுக்கு வழங்கிய செவ்வி (இது நேற்றைய உதயனில் பிரசுரமாகியிருந்தது) அமைந்துள்ளது.

சமாதானப் பேச்சு விவகாரத்தில் அமைச்சர்களுக்கு உள்விவகாரம் எதுவும் தெரியாது என்று கூறியுள்ள அவர் அதிகாரிகள் மட்டுமே கலந்து கொள்ளும் பேச்சு வார்த்தை சமாதானப் பேச்சாகாது என்றும் அவர் சாடியுள்ளார்.

அமைச்சர்கள் மட்டப் பேச்சு வார்த்தையை நடத்தாமலே பேச்சுவார்த்தையின் முன்னேற்றம் கண்டிருப்பதாக இந்தியாவில் பெருமை பேசியிருக்கிறார் சந்திரிகா.

இந்தக் குழந்தைப் பிள்ளைத் தனமான போக்கு அவர் தமது இலட்சியம் என்று கூறிக்கொள்ளும் சமாதானத்தை அடைவதற்கு ஒரு போதும் உதவப் போவதில்லை.

### குழந்தையா?

ஒரு நாட்டின் ஜனாதிபதி குழந்தைப் பிள்ளைத்தனமானவர் என்று கூறுவது பொருந்துமா? இல்லை. உண்மையில் சந்திரிகா தெரிந்தும் தெரியாதது போல, தெரியாததும் தெரிந்தது போலக் காட்டி தான் நினைத்ததை செய்ய முனைகிறார். அதற்கான தந்திரங்களைக் கையாள்கிறார். தம்மிடம் அதிகாரம் உண்டென்பதால் எதனையும் செய்து விடலாம் என்று எண்ணுகிறார். அத்தகைய அதிகாரத் தொனியில் பேசவும் செய்கிறார். அதிகாரம் தம்மிடம் உண்டு என்பதால் முன்னுக்குப் பின் முரணாகப் பேசி தனது நிலைப்பாடு சரி என்று வலுப்படுத்தவும் முயல்கிறார்.

### அதிகாரத்தனம் ஆபத்தானது

[illegible] தான் ஆட்சி புரிகிறோம். இதனை அனைவரும் ஏற்றுக் கொள்ள வேண்டும். எவர் விதிக்கும் எந்தக் காலக்கெடுவையும் ஏற்றுக்கொள்ளமாட்டோம்—என்று செய்தியாளர்கள் மத்தியில் அவர் கூறியிருப்பது அவரது அதிகாரத் திமிரைக் காட்டுகிறது!

சமாதானத்தை அடைய விரும்பும் தலைவி, சமாதானப் பேச்சுக்களை நடத்துவது என்று புறப்பட்ட ஜனாதிபதி, இவ்வாறு திமிர்த்தனமாகப் பேசுவது பாதகமான விளைவுகளையே உண்டாக்கும். ''நான் எவர் சொல்லுக்கும் கட்டுப்படப்போவதில்லை; அடுத்தவர்கள் எனது காலில் விழவேண்டும்'' என்ற வாக்கில் பிடாரித்தனமாக நடந்து கொள்ள முயல்வது புத்திசாலித் தனமல்ல.

சமாதானப் பேச்சுவார்த்தை என்பது இருதரப்பாரும் ஒருவரை மற்றவர் புரிந்து கொண்டு,சிலவிட்டுக்கொடுப்புகளைச்செய்து, வளைந்து கொடுக்கவேண்டிய இடத்தில் வளைந்துகொடுத்து, சமரசம் காண்பதேயாகும்.

### நெகிழ்ச்சி வேண்டும்

இங்கு நெகிழ்ச்சிப் போக்கு அத்தியாவசியம். தான் நிமிர்ந்த நிலையில் நிற்க, அடுத்தவர்கள் வளைந்து செல்ல வேண்டும் என்று நினைத்தால் காரியம் சித்தியடையாது. இனப்பிரச்சினை விவகாரத்தில் சந்திரிகா தமது அதிகாரத்தனத்தையும், நெகிழ்ச்சியற்ற போக்கையும் கடைப்பிடிப்பாரா

-உதயகாந்தன்-

னால் சமாதானத்தைக் காண்பது கனவாகிவிடும்.

இலங்கையில் உள்ள எமக்கு சமாதானம் தேவைப்படுகிறது. நாம் சமாதானத்தை உருவாக்க வேண்டுமானால் விடுதலைப் புலிகளுடன் பேசியே ஆக வேண்டும் என்று இந்தியாவில் வைத்துக் கருத்துக் கூறிய சந்திரிகா —

கொழும்பு திரும்பியதும்,

(6 ஆம் பக்கம் பார்க்க)

சூரியகாந்தி
உதயன் ஞாயிறு சிறப்பம்சம்

# இலக்கியம் கற்பதால் பயனென்ன?

கடந்த 16ஆம் திகதி யாழ். இந்துக்கல்லூரி குமாரசாமி மண்டபத்தில் நடைபெற்ற முழுநிலா நாள் கருத்தரங்கில் '' இலக்கியம் எது ... ஏன்? '' என்ற தலைப்பில் கவிஞர் சோ. பத்மநாதன் ஆற்றிய உரையின் தொகுப்பு:-

இலக்கியம் ஒளியைப் போன்றது. எல்லோருக்கும் ஒளியைத் தெரியும். ஆனால் அதை விளக்கமுடியாது

இலக்கியம் என்ற சொல்லுக்கு காலத்துக்குக் காலம் வெவ்வேறு வரைவிலக்கணங்கள் கூறப்பட்டு வந்துள்ளன. உயர்ந்த – மேலான— இலட்சியத்தைச் சுட்டுவது இலக்கியம் என்பது பழைமையான ஒரு கொள்கை. அது வாழ்க்கையைப் பிரதிபலிக்கும் கண்ணாடி என்பது இன்னோர் விளக்கம். ஆனால் இலக்கியம், மனித உறவுகளைப் பற்றிப் பேசுவது என்பது இன்று பொதுவாக ஏற்றுக்கொள்ளப் படுகிறது.

இசைக்கு ஒலி ஊடகம். ஓவியத்துக்கு நிறமும் சிற்பத்துக்கு கல், உலோகம், மரம் பளிங்கு என்பனவும் ஊடகம். அது போல் இலக்கியத்திற்கு மொழி ஊடகமாகிறது. மனிதன் கண்டு பிடித்தவற்றுள் மகத்தானது மொழி. எமது அன்றாட தேவைக்குப் பயன்படும் மொழி ஒரு பரிமாணம் உடையது. இலக்கியத்தில் பயிலும்மொழி பல்பரிமாணம் உடையது. உண்மையில் இத்தகைய மொழியை நாம் அன்றாட வாழ்க்கையில் பயன்படுத்துகிறோம். பழமொழி, மரபுத் தொடர்புகள் என்பன இவற்றிற்கு உதாரணங்கள்.

உவமை, உருவங்கள், படிமம், குறியீடுகள் என்ன செய்கின்றன? நம்முடைய மனதில் சித்திரம் தீட்டுகின்றன. கருத்துவடிவில் நாம் கேட்பவற்றை— வாசிப்பவற்றை மறந்து விடுகிறோம். ஆனால் காட்சிவடிவில் பார்ப்பவை நெஞ்சில் நிலைத்து நிற்கும். கவிஞன் சொல்லால் தீட்டும் சித்திரங்களும் அத்தகையனவே.

## எல்லோருக்கும் ஒளியை தெரியும். ஆனால் அதை விளக்க முடியாது. ஒளியைப் போன்றதே இலக்கியம்.

கண்ணகி பாண்டியன் சபைக்கு வருகிறாள். மேனி எல்லாம் புழுதி விரித்த கூந்தல் — கையில் ஒன்றைச் சிலம்பு – கண்களில் நீர்

''மெய்யில் பொடியும் விரித்த கருங்குழலும் கையில் தனிச் சிலம்பும் கண்ணீரும்''- இதைப் படிக்கும் போது நெஞ்சில்கண்ணகியின்தோற்றம் சித்திரமா[illegible] போரில் விழுந்த இந்திர சித்தன் உட[illegible] மண்டோதரி விழுந்து புலம்புகிறாள். தன் மைந்தன் சாவுக்கு—

அடுத்து வரப்போகும் கணவனின் சாவுக்கு—

எல்லாவற்றுக்கும் காரணமான சீதை மீது அவளுக்குக் கோபம் வருகிறது. 'அமுதாற் செய்த நஞ்சு' என்கிறாள். உள்ளே நஞ்சை வைத்துப் புறத்தே அமுதத்தாற்புனையப்பட்டவள் சீதை என உருவகிக்கிறாள். அமுதம் என்று கருதி இராவணன் நஞ்சைக் கொண்டுவந்து வைத்திருக்கிறான் என்ற குறிப்பு இதில் உண்டு.

கதை சொல்வதிலும் அதைக் கேட்பதிலும் மனிதனுக்கு நெடுங்காலமாகவே ஈடுபாடு இருந்து வருகிறது. கதைக்கும், வரலாற்றிற்கும் என்ன வேறுபாடு? வரலாறு உண்மை நிகழ்வைத் தருவது. கதை மனிதனுடைய பிரச்சினைகளை— முரண்பாடுகளை, உணர்வுகளை, உறவுகளை அலசுவது

கிரேக்க காவியங்களாகட்டும், இந்திய புராண இதிகாசங்களாகட்டும், அப்ப[illegible] நோக்கும் சங்கடங்களை ''தர்மசங்கடம்'' என்று சொல்லலாம். இழந்த அரசு– விற்றமனைவி– தொலைந்த செல்வம்– இழந்த பிள்ளை அனைத்தையும் திரும்பப் பெறலாம். ஒருபொய் சொன்னால் இது அரிச்சந்திரனுக்கு ஏற்படும் சோதனை.

தாய், தந்தையை அறியாதவன் என்ற பழி போகும்– அரசபதவி வரும்– தன் நண்பன் துரியோதனன் செய்த நன்றியை மறந்தால்! இதுகர்ணனுக்கு ஏற்படும் சோதனை—

இந்தக் காவிய நாயகர்கள் எவ்வாறு சோதனைகளுக்கு முகம்கொடுத்துத் தேறினார்கள் என்பதைக் கொண்டு இவர்களை மதிப்பிடுகிறோம். அதே சூழலில் நாம் எவ்வாறு நடந்து கொள்வோம் என்று எம்மையே நாம் மதிப்பிடுகிறோம்– ஆக, வாழ்க்கை பற்றிய ஞானத்தை, நாங்கள் இலக்கியங்கள் மூலம் பெறுகிறோம்.

இந்தத் தலைமுறை விஞ்ஞான, தொழில்நுட்பத்துறைகளுக்கு அளவுக்கு அதிகமான

தொகுப்பு :
நெடுந்தீவு லக்ஸ்மன்

முக்கியத்துவம் தருகிறது. ஏனைய துறைகளால் பயனில்லை என்ற கருத்து படித்தவர்களிடையே கூட நிலவுகிறது. ''இலக்கியம்கற்பதால் பயனென்ன? என்று இவர்கள் கேட்கிறார்கள்.

''சூரியனே அஸ்தமிக்காத சாம்ராஜ்யம் நம்முடையது'' என்று மார்தட்டினவர்கள் ஆங்கிலேயர்கள் இங்கிலாந்தின் அரசபரம்பரைகள் — வெற்றிகள் பற்றியெல்லாம் வரலாற்று நூல்கள் பறையறைந்தன – பருத்தி, கம்பளி

## இன்று பிரிட்டிஷ் சாம்ராஜ்யம் இல்லை. ஏற்றுமதிகள் அருகி விட்டன. ஆனால் வரலாற்றாசிரியர்கள் குறிப்பிடத் தவறிய ஓர் ஏற்றுமதிப் பொருள் இலக்கியத்துக்கு இன்னும் பெருமை சேர்க்கிறது அதுதான் ... ஆங்கில இலக்கியம்.

ஆடைகள் நிலக்கரி யந்திர சாதனங்கள் எல்லாம் ஏற்றுமதிப் பொருள்களாகக்குறிப்பிடப்பட்டன.

இன்று பிரிட்டிஷ் சாம்ராஜயம் இல்லை. ஏற்றுமதிகள் அருகிவிட்டன. ஆனால் வரலாற்றாசிரியர்கள் குறிப்பிடத் தவறிய ஓர் ஏற்றுமதிப் பொருள் இங்கிலாந்துக்கு இன்றும் பெருமை சேர்க்கிறது அதுதான் ஆங்கில இலக்கியம்.

மனிதன் கால தேச வர்த்தமானங்களுக்குக் கட்டுப்பட்டவன் எமது வாழ்நாள் குறுகியது. அதற்குள் எல்லா அனுபவங்களையும் பெற்று விடலாம் என்பது சாத்தியமானதல்ல. நாம் பிறருடைய அனுபவங்களில் இருந்து நிறையக் கற்கிறோம். ஒரு தலைமுறையைச் சேர்ந்த இலக்கிய கர்த்தாதன் தலைமுறைக்கு மட்டுமல்ல அடுத்த தலைமுறைகளுக்கும் தன் அனுபவத் திறனைத் தருகின்றான்.

இலக்கியம் எமது உணர்திறனை (Sensibility)க் கூர்மையடையச் செய்கிறது. சரியான மதிப்பீடுகளைச் செய்யவும் பொருத்தமான முடிவுகளை எடுக்கவும் இலக்கியம் நமக்கு உதவுகிறது. ★

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## விளையாட்டுப் பிரியர்களுக்கு
## ஒரு மகிழ்ச்சியான செய்தி

சகல விதமான, தரமான
விளையாட்டுப் பொருள்களை
நியாய விலையில் பெற்றுக் கொள்ள
புதிய தாபனம்

**ஜாஸ் பல் பொருள் விற்பனையகம்**
**JAASH MULTI TRADERS**
158, முதலாம் குறுக்குத் தெரு,
யாழ்ப்பாணம், (வேம்படி மகளிர் கல்லூரி அருகில்)

★ விளையாட்டுக் கழகங்களுக்கும் பாடசாலைக்கும், விசேட கழிவுகள் வழங்கப்படும்.

[35985]


## மரண அறிவித்தல்கள்

### சின்னையா துரைராஜா
[இளைப்பாறிய கூட்டுறவு பரிசோதகர்]

யாழ்ப்பாணம் இலக்கம் 6, இராசாவின் தோட்ட வீதியைச் சேர்ந்த சின்னையா துரைராஜா அவர்கள் 31-3-95 இல் கொழும்பில் காலமானார்.

அன்னார் கிளடிஸ் மங்களத்தின் அன்புக் கணவரும், நேசகுமார், தேவபாலன், ஜெபசீலன், சாந்தினி சரோஜினி, றெஜினா [Joe], செல்லா ஆகியோரின் அன்புத் தந்தையும் ஆவார்.

அன்னாரின் நல்லடக்க ஆராதனை கொழும்பில் நடைபெறும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்
பேர்சி ஜெயக்குமார்

272/8E, High Level Road,
Nugegoda. [36008]

### கணபதிப்பிள்ளை வேலுப்பிள்ளை

எழுதுமட்டுவாளில் வசிக்கும் கணபதிப்பிள்ளை வேலுப்பிள்ளை (எழுதுமட்டுவாள் சிவன்கோவில் ஸ்தாபகரும், தர்மகர்த்தாவும்) சிவபதம் அடைந்து விட்டார்.

இவர் காலஞ்சென்ற பொன்னம்மா, அன்னம்மாவின் அன்புக் கணவரும் நல்லகுருநாதன்(குமார்), யோகமலர், புஸ்பமலர் ஆகியோரின் அன்புத் தந்தையும், விநாயகமூர்த்தி [மருகன் மில் வரணி] தர்மராசா, (Deelah communi cation கொழும்பு உரிமையாளர்) கவிதா ஆகியோரின் மாமனாருமாவார்

அன்னாரின் இறுதிக்கிரியைகள் 2-4-95 ஞாயிறு காலை 8 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெறும்,

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர் நண்பர்கள் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்
வே. நல்லகுருநாதன் (குமார்)
(மகன்)

[36003]

### திருமதி மாணிக்கம் சின்னப்பு

திருமதி மாணிக்கம் சின்னப்பு 01-04-95 இல் காலமானார். இவர் சின்னப்புவின் அன்பு மனைவியும், இராமலிங்கம் (Nestle கைதடி வடக்கு), யோகலிங்கம் (கனடா), கனகலிங்கம் (C T B) துரைசிங்கம், துரைராசா, பாலசிங்கம், கமலாதேவி (சுவிஸ்) ஜெயராசா (போதனா வைத்தியசாலை, யாழ்ப்பாணம்) ஆகியோரின் அன்புத் தாயாரும் ஆவார்

அன்னாரின் இறுதிக்கிரியைகள் 31/10 சங்கிலியன் வீதி, நல்லூரில் காலை 10 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று தகனக்கிரியைக்காக பூதவுடல் செம்மணி மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்
சி. இராமலிங்கம்
[மகன்]

(36004)

### செல்வன் க. முருகவேள்

பருத்தித்துறை வி. மு. வீதியைச் சேர்ந்த ஆ. கந்தசாமி [ஓய்வு பெற்ற நீதிமன்றப் பதிவாளர்] கமலாம்பிகை ஆகியோரின் அருமை மகன் க. முருகவேள் 28-03-95 இல் ஜேர்மனியில் அகால மரணமடைந்துள்ளார்

இவரது பூதவுடல் ஜேர்மனியில் தகனம் செய்யப்பட்டது. இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்;
ஆ. கந்தசாமி

22/2, வி. மு. வீதி,
பருத்தித்துறை [36007]

### பொன்னையா சிங்கராயர்

அச்சுவேலியைச் சேர்ந்த யோசவ் பொன்னையா சிங்கராயர் காலமாகிவிட்டார்

அன்னார், காலஞ்சென்ற வேலுப்பிள்ளை பொன்னையா, முத்தம்மா தம்பதிகளின் மகனும் மேரி நல்லம்மாவின் அன்புக்கணவரும் கிங்ஸ்லி கில்டா, கில்மன், இமெல்டா ஆகியோரின் பாசமிகு அன்புத் தந்தையும், காலஞ்சென்ற ஜெயராசா, காலஞ்சென்ற மேரி அக்னெஸ், அருட் தந்தை J P E செல்வராசா (பங்குத்தந்தை யுவானியார் கோயில் சுண்டிக்குளி), அருட் சகோதரி ஜெரோம் (அதிபர் பொஸ்கோ வித்தியாலயம்), ராணி, நவமணி, ஆன்சபினா ஆகியோரின் அன்புச் சகோதரரும் நவரத்தினம், தேவசகாயம், ராணி கிங்ஸ்லி, பீற்றர் சதியன், றஞ்சினி கில்மன், ஆகியோரின் அன்பு மாமனாரும், காலஞ்சென்ற ஐயாத்துரை - மரியம்மா தம்பதிகளின் மருமகனும் சொர்ணம், இராசாத்தி, மணி, அருட் சகோதரி புனிதம், தியாகேஸ், காலஞ்சென்ற விஜயரத்தினம், சேவியர், சந்திரன் ஆகியோரின் அன்பு மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் நல்லடக்க ஆராதனை நாளை (3-4-1995) திங்கள் மாலை 4-30க்கு அச்சுவேலி புனித சூசையப்பர் தேவாலயத்தில் நடைபெற்று குடும்பசேமக்காலையில் பூதவுடல் நல்லடக்கம் செய்யப்படும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் யாபேரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
அருட்தந்தை J P E செல்வராசா,
(சகோதரர்)

சூசையப்பர் கோவிலடி
தென்மூலை, அச்சுவேலி. [35998]

## உதவும் நாடுகளின் கூட்டத்தில்
# நூறு கோடி டொலர்கள் உதவி அரசுக்கு கிடைக்கும்

கொழும்பு, ஏப். 2

எதிர்வரும் 28 ஆம் திகதி பாரிஸில் நடைபெறவுள்ள உதவி வழங்கும் நாடுகளின் கூட்டத்தின் முடிவில் வெளிநாட்டு உதவியாக நூறு கோடி அமெரிக்க டொலர்கள் கிடைக்கும் என அரசு நம்பிக்கை தெரிவித்துள்ளது.

பாரிஸில் நடைபெறவுள்ள இலங்கைக்கு உதவி வழங்கும் நாடுகளின் கூட்டத்தில் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கா தலைமையிலான உயர் மட்டக்குழு ஒன்று கலந்து கொள்ள இருக்கிறது

இலங்கையில் சமாதான சூழ்நிலை ஏற்பட்டால் அதிக நிதி உதவி வழங்கத் தயாராக இருப்பதாக உதவி வழங்கும் நாடுகள் ஏற்கனவே அறிவித்திருப்பது தெரிந்ததே.

(ஐ-3)

### புலிகளின்..
[1 ஆம் பக்கத் தொடர்ச்சி]

கொள்கின்றோம்.

குறிப்பாக வடக்குக்கும், தெற்குக்கும் ஒரு சுதந்திரமான பாதையைத் திறக்கும் விடயத்தில் தேவையான — இசைவாகக் கூடிய—நடவடிக்கைகள் அனைத்தையும் மேற்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறோம்.

யாழ்ப்பாணப் பிராந்தியத்தில் வழமை நிலையை மீளக் கொண்டு வருவதற்காக அரசு எடுக்கும் நடவடிக்கைகளை சாத்தியமாக்கும் வகையில் — சமாதானத்துக்கான அரசியல் நல்லெண்ணத்தை ஒன்றிணைந்து வெளிப்படுத்தி — தென்னிலங்கை மக்கள் வட பகுதி மக்களுக்கு தமது நல்லெண்ணத்தை தொடர்ந்தும் வெளிப்படுத்த வேண்டும் எனவும் நாம் கேட்டுக்கொள்கிறோம்.

துன்பத்தைத் தாங்கும் ஆற்றலையும், மனத் தளர்வின்மையையும் சிறப்பான முறையில் வெளிப்படுத்திய வட பகுதி மக்களிடம் சமாதான முயற்சிகள் நிறுத்தப்பட்டு விடாமல் இருக்க உங்கள் நம்பிக்கையை தொடர்ந்தும் பேண வேண்டும் எனவும் கேட்டுக்கொள்கிறோம்.

இவ்வாறு அந்த அமைப்பின் மனுவில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஐ-5)

### அதிகாரத்..
(5 ஆம் பக்கத் தொடர்ச்சி)

எங்கள் அரசை நாங்கள்தான் ஆட்சி புரிகிறோம் — என்று கூறுவது ஒன்றுக்கு மற்றது இசைந்ததாக இல்லை.

இவர் இப்போதே இவ்வாறெனின், அரசியல் விவகாரம் குறித்துப் பேசத் தொடங்கிய பின்னர் எவ்வாறு நடந்து கொள்வார் என்பதனைத் தமிழ் மக்கள் வகுத்துப் பார்க்க வேண்டியது அவசியம்.

இப்போதே சாண் ஏற முழம் சறுக்கும் நிலையில் உள்ள சமாதான முயற்சி, அரசியல் தீர்வு குறித்து ஆராயப் புறப்பட்ட பின்னர் இலக்கை அடைவதற்கு சாத்தியம் உண்டா என்று ஏக்கத்துடன் காத்திருக்கவும் நேரிடலாம்.

ஆனால் தட்டிக் கேட்க ஆள் இல்லாவிடில் தம்பி சண்டப் பிரசண்டம் என்ற நிலைக்குத் தமிழர்கள் அனுமதிக்கப் போவதில்லை என்பதனை சந்திரிகா மனதில் கொள்வது நல்லது.

இல்லையேல் இனப்பிரச்சினைக்குத் தீர்வு காணாமல், வடக்கிலும் தெற்கிலும் இருமுனை நெருக்கடியை அவர் எதிர்கொள்ள நேரிடும்.

எதிர்வரும் ஜூன் மாதத்தில் அவரது ஆட்சி ஆட்டம் காணத் தொடங்கும்; கனிப்பட்ட முறையிலும் சந்திரிகா பலசிரமங்களை எதிர்கொள்ள நேரிடும் என்று சோதிட வட்டாரங்கள் கூறுவதை வலிந்து சென்று உறுதிப்படுத்தும் போக்கை அவர் மாற்றுவது எல்லோருக்கும் நல்லது ★

### முஸ்லிம்களுக்கு...
(2 ஆம் பக்கத் தொடர்ச்சி)

கிடைத்துள்ளது.

அதன் பின்னர் திரு. தக்கரே மேலும் ஆவேசம் அடைந்தவராக, தமக்கு ஏதாவது நிகழ்ந்தால் தமது கட்சி ஆதரவாளர்கள் சம்பந்த சமூகத்தவரை பூண்டோடு படுகொலை செய்வர் என்றும் எச்சரித்துள்ளார்

"எனது தலையில் உள்ள ஒரு மயிருக்குச் சேதம் விளைந்தாலும் அதனைச் செய்தவர் எந்தச் சமூகத்தைச் சேர்ந்தவரோ அந்தச் சமூகத்தை பம்பாயில் இருந்து மட்டுமல்ல உலகத்தில் இருந்தே ஒழித்துக் கட்டி விடுமாறு எனது ஆதரவாளர்களுக்கு இப்போதே உத்தரவிடுகிறேன்" — என்று தக்கரே கூறியதாக ஏ. எவ். பி. செய்தி நிறுவனம் தெரிவித்தது.

# பாதிக்கப்பட்டோர் விவரம் திரட்டப்படும் இடங்கள்

யாழ்ப்பாணம், ஏப். 2

1983 ஆம் ஆண்டின் பின்னர் வன்செயல்கள் மற்றும் இயற்கை காரணிகளால் சொத்திழப்பு, உயிரிழப்பு மற்றும் அங்கவீனம் போன்ற பாதிப்புக்களுக்கு உள்ளான மக்கள் தொடர்பான விவரம் சேகரிப்பு தமிழர் புனர்வாழ்வுக் கழகத்தால் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது

இதன் தொடர்ச்சியாக யாழ்ப்பாணம், கரவெட்டி, மருதங்கேணி, பருத்தித்துறை போன்ற பிரதேச செயலர் பிரிவுகளுக்கு உட்பட்ட கிராம சேவையாளர் பிரிவுகளிலும் குறிப்பிட்ட திகதிகளில் குடும்ப அட்டையுடன் குறிப்பிட்ட இடங்களுக்கு சமுகம் தந்து பாதிப்பு விவரங்களைப் பதியுமாறு தமிழர் புனர்வாழ்வுக்கழகம் கேட்டுள்ளது.

யாழ் பிரதேச செயலர் பிரிவில் இன்று 2 ஆம் திகதி முதல் 6 ஆம் திகதி வரை பாசையூர் மேற்கு ஜே/65 கிராம சேவையாளர் பகுதியில் அக்கிராம சேவையாளரின் அலுவலகத்திலும்—

ஈச்சமோட்டை ஜே/66 கிராம சேவையாளர் பகுதியில் எதிர்வரும் 9 ஆம் திகதி முதல் 13 ஆம் திகதி வரை அக்கிராம சேவையாளர் அலுவலகத்திலும்—

கரவெட்டி பிரதேச செயலர் பிரிவில் எதிர்வரும் 6 ஆம் திகதி கரணவாய் கிழக்கு ஜே/351 கிராம சேவையாளர் பகுதியில் அக் கிராம சேவையாளர் அலுவலகத்திலும்—

மருதங்கேணி பிரதேச செயலர் பிரிவில் இன்று 22 ஆம் திகதி உடுத்துறை ஜே/430 கிராம சேவையாளர் பகுதியில் உடுத்துறை வடக்கு ச. ச. நிலையத்திலும்—

எதிர்வரும் 3 ஆம் திகதி செம்பியன்பற்று தெற்கு ஜே/427 கிராம சேவையாளர் பகுதியில் செம்பியன் பற்று ச. ச. நிலையத்திலும்—

எதிர்வரும் 4 ஆம் திகதி அம்பன் ஜே/422 கிராம சேவையாளர் பகுதியில் அம்பன் ச. ச. நிலையத்திலும்—

எதிர்வரும் 5 ஆம் திகதி குடத்தனை வடக்கு ஜே/420 வத்திராயன் ஜே/429 கிராம சேவையாளர் பகுதிகளில் குடத்தனை வடக்கு நெசவு நிலையத்திலும்—

பருத்தித்துறை பிரதேச செயலர் பிரிவில் இன்று 2ஆம் திகதி கெருடாவில் தெற்கு ஜே/335 கிராம சேவையாளர் பகுதியில் மீனவர் சங்க அலுவலகத்திலும்—

எதிர்வரும் 6 ஆம் திகதி அல்வாய் வடமத்தி ஜே/398 கிராமசேவையாளர் பகுதியில் அக்கிராம சேவையாளர் அலுவலகத்திலும் —

எதிர்வரும் 6 ஆம் திகதி தொண்டமனாறு வடக்கு ஜே/384 கிராம சேவையாளர் பகுதியில் அக்கிராம சேவையாளர் அலுவலகத்திலும் பதிவுகள் மேற்கொள்ளப்படும். (இ-4)

### வெட்டுப்புள்ளி...
(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

விரிவாக எடுத்துக் கூறினார்கள்.

நாட்டின் சூழ்நிலை காரணமாகவே வட பகுதி மாணவர்களுக்கு இந்த பாதிப்பு ஏற்பட்டது என்றும் —

இந்தப் பிரச்சினைக்கு நியாயமான தீர்வை தாம் மிக விரைவில் வழங்குவதாகவும் ஜனாதிபதி உறுதியளித்தார்.

இந்தச் சந்திப்பின் போது அமைச்சர்கள், ஜி. எல். பீரிஸ் லக்ஷ்மன் கதிர்காமர், ஜனாதிபதியின் செயலர் திரு. பாலபட்ட பெண்டி ஆகியோரும் சமுகமளித்திருந்தனர். (அ-4)

### சுகா...
(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

கொள்ளப்படும் என்று தமிழீழ சுகாதார சேவைகள் பொறுப்பாளர் அறியத்தருகிறார்.

அவர் வெளியிட்டுள்ள செய்திக் குறிப்பு வருமாறு:

யாழ். குடாநாட்டில் உள்ள சகல உலர் உணவுப் பொருள்களை ஞ்சியப்படுத்துவோர், மொத்த, சில்லறை பலசரக்கு விற்பனையாளர், தேனீர்ச் சாலை, சாப்பாட்டுக்கடை, உணவு விடுதி பேக்கரி (வெதுப்பகம்), இனிப்புவகை, குளிர்களி (ஐஸ்கிறீம்), குளிர்பானம், பழரசம், நல்லெண்ணை, பாற்பண்ணை, கருவாடு, பப்படம் ஆகியன தயாரிக்கும் சிறு கைத்தொழிலாளர்—

இறைச்சி, மீன், கருவாடு, மரக்கறி, பழவகை, பால் மோர் விற்பனை செய்வோர், நெல் குற்றும், தானியம், மிளகாய் அரைக்கும் ஆலை, உணவு பொதியிடுவோர், குளிர்களி வாகன விற்பனை உரிமையாளர்கள், தமது 1995 ஆம் ஆண்டுக்கான தமிழீழ சுகாதார சேவைகள் அனுமதியைப் பெறுவதற்கு அவ்வப் பகுதியில் உள்ள மாநகரசபை, நகரசபை, பட்டினசபை, கிராமசபை அலுவலகங்களில் இதற்குரிய விண்ணப்பப் படிவத்தைப் பெற்று பூர்த்திசெய்து எதிர்வரும் 10 ஆம் திகதிக்கு முன்னர் ஒப்படைத்தல் வேண்டும்.

கூட்டுறவுச் சங்கங்கள், உணவு ஆக்கம் விற்பனையில் ஈடுபடும் ஏனைய நிறுவனங்களுக்கும் இவை ஏற்புடையதாகும். (ந)

### பிரிட்டிஷ்...
(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

போக்குவரத்து பாவனைக்கான மினிபஸ் என்பன அடங்கும்.

இவை ஏற்கனவே கப்பல் மூலம் இங்கு எடுத்து வரப்பட்டுள்ளன. (ஐ-7)

## காலிதா ஸியா கொழும்பு வருவார்

பங்களாதேஷ் பிரதமர் பேகம் காலிதா ஸியாவை மீண்டும் ஒரு தடவை இலங்கைக்கு விஜயம் செய்யுமாறு ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கா அழைப்பு விடுத்துள்ளார்.

ஜனாதிபதியின் அழைப்பை பிரதமர் பேகம் காலிதாஸியா ஏற்றுக் கொண்டுள்ளார்.

### தகவல்..
(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

காட்சி சேவையும் – தவறான தகவல்களை பரப்புவதன் மூலம் இதே போன்ற நடவடிக்கையை மேற்கொண்டு வருகிறது.

இத்தகைய சூழ்நிலையில் மிக உணர்ச்சிகரமான சமாதான நடவடிக்கை தொடர்பான சில தகவல்களை வெளியிடுவது அரசுக்கு சிரமமாக இருக்கும்.

சரியான அரசியல் பேச்சு வார்த்தைகளை ஆரம்பிக்க விடுதலைப் புலிகள் இயக்கத்திடம் இருந்து ஒரு நிகழ்ச்சி நிரலைக் கோருவதன் மூலம் அரசாங்கம் ஒரு முன் நிபந்தனையை முன்வைத்திருக்கிறது அதனைத் தவிர வேறு எந்த ஆலோசனைகளையோ, முன் நிபந்தனைகளையோ அரசு முன்வைக்கவில்லை.

இவ்வாறு சந்திரிகா மேலும் தெரிவித்தார் (இ-5)

## இன்றைய இசை நிகழ்வுகள்

யாழ்ப்பாணம், ஏப். 2

யாழ். நாச்சிமார் கோவில் வருடாந்த மகோற்சவத்தை முன்னிட்டு ஸ்ரீகாமாட்சி சனசமூக நிலையம் நடத்தும் இசை அரங்கின் இரண்டாம் நாள் நிகழ்ச்சிகள் இன்று இரவு 7.30 மணிக்கு ஆரம்பமாகும்.

செல்வன்கள் எஸ். உதயசங்கர், கு. சுரேஸ், பா. பாலகுமார், க. நந்தகுமார் ஆகியோர் கலந்து கொள்ளும் தாள வாத்திய இசையும் —

செல்விகள் க. நளினி க. துவாரகா ஆகியோரின் இசைக்கச்சேரியும் இன்று இடம்பெறும். (அ)

## ஈ.பி.டி.பி யோசனை தெரிவிப்பு

கொழும்பு, ஏப். 2

வடக்கு கிழக்கு இணைந்த சமஷ்டிக் கூட்டாட்சி முறையின் கீழ் இனப்பிரச்சினைக்கு தீர்வு ஒன்று காணப்படும் வரை —

வடக்கு கிழக்கு பகுதி நாடாளுமன்ற உறுப்பினர்கள் அடங்கிய சபையிடம் வடக்கு கிழக்கு மாகாண நிர்வாகப் பொறுப்பு ஒப்படைக்கப்பட வேண்டும்.

ஈ. பி. டி. பி. அமைப்பின் செயலாளர் திரு டக்ளஸ் தேவானந்தா முன்கண்டவாறு அரசுக்கு யோசனை தெரிவித்துள்ளார். (ஐ-4)


## ரேஸ்ட் லைன் இன்டஸ்றீஸ் (தனி) லிமிட்டெட்
### இரு மாதங்களுக்கு ஒருமுறை 5ஆவது சீட்டிழுப்பு

இரு மாதங்களுக்கு ஒருமுறை நடைபெறும் 5 ஆவது மாபெரும் வெற்றுப் போத்தல் பரிசு குலுக்கல் போட்டியில் பரிசு பெறும் அதிர்ஷ்டசாலிகளின் இலக்கங்களும் பெயர்களும் வருமாறு:

1 ஆம் பரிசு **12415** மணிக்கூடு
K. ஞானசேகரம், "கலா வாசம்", கண்ணகி அம்மன் கோயில் லேன், கொக்குவில் கிழக்கு, கொக்குவில்.

2 ஆம் பரிசு **11276** எவர்சில்வர் பொருள்கள்
ம. டொறின்டன், 14, ஈச்சமோட்டை வீதி, சுண்டிக்குளி.

3 ஆம் பரிசு **13501** T. செட்
சி ஜெயரட்ணம், கொக்குவில்.

ஆறுதல் பரிசுகள்

1 ஆம் பரிசு **12405** குடை
திரு. ஐ துரைராஜா, 108, ஐயனார் கோவில் வீதி, யாழ்ப்பாணம்.

2 ஆம் பரிசு **9791** தொப்பி
K. அருளீஸ்வரி, தபால் பெட்டி ஒழுங்கை, கோப்பாய்.

3 ஆம் பரிசு **11905** அல்பம்
க வல்லிபுரம், 19, திருநெல்வேலி வடக்கு, பலாலி றோட், யாழ்ப்பாணம்.

4 ஆம் பரிசு **9920** பாடசாலைப் பை
யோ. மயூரகுமாரன், "லச்சுமி வாசம்", அளவெட்டி வடக்கு, அளவெட்டி.

5 ஆம் பரிசு **9763** பிளாஸ்டிக் வாளி
சி. சிவமாலா, கோப்பாய் மத்தி, கோப்பாய்.

6 ஆம் பரிசு **10014** எவர்சில்வர் பேணிகள்
க. இரசகுமார், மல்வத்தை, சமிகாலை

7 ஆம் பரிசு **12315** கைமணிக்கூடு.
அசோக்குமார், 4, சோமசுந்தரம் அவெனியு, சுண்டிக்குளி.

5 ஆவது வெற்றுப் போத்தல் பரிசு குலுக்கல் போட்டி, இதுவே இறுதிப் போட்டி ஆகும். இத்துடன் இப் போட்டி நிறுத்தப்பட்டுள்ளது.

**ரேஸ்ட் லைன் இன்டஸ்றீஸ் (தனி) லிமிட்டெட்**
14, சீனியர் ஒழுங்கை, யாழ்ப்பாணம்.

[சி-882]


உ
சிவமயம்

## ★ திருமண அழைப்பு ★

அன்புடையீர்!

நிகழும் பவ வருடம் பங்குனித் திங்கள் 22ஆம் நாள் [05-04-95] புதன்கிழமை பகல் 10-32 முதல் 11-22 வரையில் உள்ள இடப இலக்கின பஞ்சமி திதியும், ரோகிணி நட்சத்திரமும் சித்தயோகமும் கூடிய சுப முகூர்த்தத்தில் ஸ்ரீ பால செல்வ விநாயக மூர்த்திகோயிலில் [கபபித்தாவத்தை, மருதானை கொழும்பு -10]

| | |
|---|---|
| திரு. திருமதி சோமசுந்தரம் தம்பதிகளின் திருநிறை செல்வன் **பிரதீபன்** அவர்களுக்கும் | திரு. திருமதி மாசிலாமணி தம்பதிகளின் திருநிறை செல்வி **கீதாஞ்சலி** அவர்களுக்கும் |

திருமணம் செய்ய பெரியோர்கள் நிச்சயித்திருப்பதால் அத்தருணம் தாங்கள் தங்கள் சுற்றம் சூழ வருகை தந்து மணமக்களை ஆசீர்வதிக்கும்படி அன்புடன் அழைக்கின்றோம்.

★ இங்ஙனம் தங்கள் நல்வரவை நாடும் ★

திரு. திருமதி சோமசுந்தரம்,
['ராஜஸ்தான்', பருத்தித்துறை வீதி, கொடிகாமம்.]
16/2, ஹம்டன் ஒழுங்கை,
கொழும்பு -6

திரு. திருமதி மாசிலாமணி,
45/27, சுவர்ணா வீதி,
கொழும்பு -6

(இரு வீட்டார் அழைப்பு)

[சி-873]

இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிற்றெட்டினரால் யாழ்ப்பாணம் நாவலர் வீதி 292/2 இலக்கத்திலுள்ள அச்சகத்தில் 02-04-1995 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org